உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு


e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்
















விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

# அருள்தரும் அற்புத ஆலயங்கள்

சிறப்பிதழ்



பழனி முருகன் கோவில் தைப்பூச விழாவிற்கு
வருகை தரும் பக்தர்களை
வருக! வருக!! என வரவேற்கிறோம்

அன்புடன் உலக மக்கள் அனைவரும்
ஆனந்தமாக வாழவேண்டும்

# S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

## மரம், ஓடு வியாபாரம் & சாமில்

SAK **சீனியப்பா குரூப்ஸ்** SAK





எங்களிடம் ஒரிஜினல் (மர்மா), ஆஸ்திரிரேலியாவேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

**சீனியப்பா லாட்ஜ் A/C**

**SAK திருமண ஹால்**



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,

9842868256



aanmeegamalar.com

# முழுமுதற் கடவுளும் தும்பிக்கை ஆழ்வாரும்

விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாதிபத்தியம் எனப்படுகிறது. இந்தக் காணாதிபத்தியம் பின்பு சைவ சமயத்தோடும், வைணவ சமயத்தோடும் ஒன்றிணைந்தது. சைவர்கள் விநாயகரை முதன்முதற் கடவுளாகவும், வைணவர்கள், விநாயகரைத் "தும்பிக்கை ஆழ்வார்" என்று அழைத்து வழிபடுகின்றனர்.

இவர் கணங்களின் அதிபதி என்பதால் கணபதி என்றும், யானையின் முகத்தினைக் கொண்டுள்ளதால் யானைமுகன் என்றும் அழைக்கப்பெறுகிறார்.

**கணபதி:** கணங்களிற்கு அதிபதி. பூதகணங்களிற்கெல்லாம் அதிபதியாதலினால் கணபதி என்றழைக்கப்படுகின்றார்.

**ஆனைமுகன்:** ஆனை அதாவது யானை முகத்தை உடையவராதலால் ஆனைமுகன் என்றழைக்கப்படுகின்றார்.

**கஜமுகன்:** கஜம் என்றாலும் யானையைக் குறிக்கும். யானைமுகத்தை உடையவராதலினால் கஜமுகன் என்றழைக்கப்படுகின்றார்.

**விக்னேஸ்வரன்:** விக்கினங்களைத் (தர்மவழியில் நிற்பவர்களின் துன்பங்களைத்) தீர்க்கும் ஈஸ்வரன் அதாவது அறத்தின் வழியில் வாழ்பவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் கடவுள்

பிள்ளையாரை வணங்கிச் செயலைத் தொடங்கினால் தன்னம்பிக்கையுடன் வெற்றிகரமாக எதிர்பார்த்த பலனுடன் செவ்வனே செய்து முடிக்கலாம் என்பது நம்பிக்கை.

**சிறப்புகள்:** விநாயகப் பெருமான் யானை முகமும், மனித உடலும் கொண்டு ஓம்கார வடிவமாக காட்சி தருபவர். ஒற்றைக் கொம்பு, ஐந்து கரம், பெரிய காது, பெரிய வயிறு ஆகியவற்றுடன் காட்சி தரக் கூடியவர். விநாயகரின் இந்த உருவத்திற்கு பின்னால் மிகப் பெரிய காரணம் உள்ளது. வேறு எந்த தெய்வத்திற்கு இல்லாத தனித்துவமான உருவ சிறப்பு மிக்கவர் விநாயகப் பெருமான். அவரின் உருவ அமைப்பே, அவரை ஏன் முழு முதற் கடவுளாக வழிபடுகிறோம் என்ற காரணத்தை உணர்த்தி விடும்.

**விநாயகர் உருவ விளக்கம்:**

திருவடி ஆன்மாவைவிடாமல் பிடித்துக் கொண்டு இருக்கும் மல, கன்ம, மாயைகளை அழித்து, நிலையான இன்பத்தை அளிப்பது ஞானம். அந்த ஞானமே விநாயகரின் திருவடிகளாக இருக்கின்றன.

பெரிய வயிறு ஆகாயம்எல்லாப் பொருள்களும் தனக்குள் ஒடுங்கவும், உண்டாகவும் இடம் அளித்து இருப்பது போலப் பெரிய வயிறாகிய ஆகாயமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தனக்குள் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகின்றது.

**கரங்கள் இருக்க காரணம்:**

ஐந்துகரங்கள் பிள்ளையாரின் ஒரு கை பாசத்தை ஏந்தியுள்ளது. அது படைத்தலைக் குறிக்கிறது. எனவே இவரே பிரம்மா வாகிறார். தந்தம் ஏந்திய கை காத்தலைக் குறிக்கிறது. ஆக,இவரே மகாவிஷ்ணுவாகிறார். துதிக்கை அனுக்ரகம் செய்கிறது. அங்குசம் ஏந்திய கை அழித்தலைக் குறிக்கிறது. எனவே, இவர் ருத்ரர் ஆகிறார். மோதகம் ஏந்திய கை அருளைக் குறிக்கிறது. எனவே, இவரே சர்வ சக்தி படைத்த பரமேஸ்வரனாகவும் இருக்கிறார்.

**பெரிய காதுகள் எதற்காக?**

கொம்புகள் மகாபாரதத்தை எழுதுவதற்காகத் தமது கொம்பையே ஒடித்தது வெளித்தோற்றத்தை விட அறிவுக்கு முன்னுரிமை தர வேண்டியதை உணர்த்துவதாகக் கூறப்படுகின்றது.

தாழ்செவி விநாயகரின் முறம் போன்ற பெரிய காதுகள் செவியில் விழும் செய்திகளைச் சலித்து நல்லவற்றை மட்டும் தேர்ந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கின்றன.


**விநாயகர் மூர்த்தங்கள்:**

பொதுவாக யானை முகமும், மனித உடலுமாகக் காட்சியளிக்கும் விநாயகர், பல்வேறு வடிவங்களிலும் கோவில்களில் காட்சியளிக்கிறார். நரமுக விநாயகர் மனித முகத்துடன் காட்சியப்பவர். சிதலப்பதி முத்தீசுவரர் கோயிலில் உள்ள விநாயகர் தும்பிக்கையின்றி மனித உருவில் உள்ளார். நடன கணபதி, நர்த்தன கணபதி நடனமாடும் விநாயகர். சித்தி, புத்தி கணபதி மனைவிகளான சித்தி மற்றும் புத்தி ஆகியோருடன் காட்சியளிப்பவர்.

**துருவ கணபதி விரதம்:**

வருடந்தோறும் ஆவணி மாதம் வளர் பிறைச் சதுர்த்தி திதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படும்.

மும்பையில் தனிப்பெரும் விழாவாக இந்துக்களால் கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தி விழா, துர்வா கணபதி விரதம் என குறிப்பிடப்படுகிறது. துர்வா யுக்மம் எனும் சொல்லானது அருகம்புல்லைக் குறிப்பதாகும். விநாயகருக்கு விரதம் இருந்து மாலையிடுவதும் இந்நாளில் செய்யப்படுகிறது.



# திருவண்ணாமலை

சைவ சமயத்தில் நினைத்தாலே முக்தி தரக் கூடியத் தலமாக திருவண்ணாமலை உள்ளது. திருவண்ணா மலையில் ஆண்டுக்கு நான்கு முறை பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. இவற்றுள் கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படுகின்ற பிரம்மோற்சவம் சிறப்பானதாகும். இந்தப் பிரம்மோற்சவ விழா பத்து நாட்கள் கொண்டாடப் படுகிறது.

கிரிவலம் வருகின்ற பாதையில், எண்ணற்ற சித்தர் களின் ஜீவசமாதிகள் அமைந்துள்ளன. இடைக்காடர், குகை நமச்சிவாயர், இரமண மகரிஷி ஆசிரமம், சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமம், விசிறி சாமியார் ஆசிரமம், மூக்குப் பொடி சித்தர் போன்றவை உள்ளன.

திருவண்ணாமலை மலை ஓர் இறந்த எரிமலையாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் இது வெடித்து, இதன் தீக்குழம்பு, நீரில் தோய்ந்து உருவானதுதான் தக்காணம் என்றும் சிலர் கூறுவார்.

பஞ்சபூதத்தலங்களில் ஒன்றாகவும் சைவக்குரவர் களால் பாடல் பெற்றத்தலமாகவும் சிறப்புபெற்ற திருக்கோயில். இங்குள்ள அண்ணாமலை யார் கோயில் சுமார் 1100 ஆண்டுக ளுக்கு முன் கட்டப்பட்டு தொடர்ந்து சோழர்கள், பாண்டியர்கள், சம்புவராயர்கள், போசளர்கள், விஜயநகர அரசர்கள், நாயக்க மன்னர்கள், நகரத்தார்கள், குறுநில மன்னர்கள், ஜமின்தார்கள் என பல்வேறு அரசர்களின் பங்களிப்பு இக்கோயில் கட்டடக்கலை வரலாற்றில் உள்ளன.

இக்கோயிலில் ஆயிரக்கணக்கான சிற்பங்களும்,450 கல்வெட்டுகளும் உள்ளன. இக்கோயிலில் 100க்கும் மேற்பட்ட சந்நிதிகள் உள்ளன. இறை உருவங்கள், செப்புத்திருமேனிகள், ஓவியங்கள், அழகிய திருச்சுற்று கள், தீர்த்தக்குளங்கள், ஆயிரக்கால் மண்டபம், வானு யர்ந்த கோபுரங்கள் இக்கோயிலின் சிறப்புகள் ஆகும். 25 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாய் அமைந்துள்ளது இத்திருக்கோயில். கிருஷ்ணதேவராயர் கட்டியகிழக்கு ராஜகோபுரம் 217 அடி உயரம், தமிழ்நாட்டில்இரண்டாவது உயரமான கோபுரம் ஆகும். இவை தவிர வல்லாள மகாராஜா கோபுரம், கிளிக்கோபுரம், அம்மனிஅம்மன் கோபுரம் ஆகியன முக்கியத்துவம் வாய்ந்த கோபுரங்களாகும். மலைவலப்பாதையில் அமைந்துள்ள எழுத்து மண்டபம் ஓவிய கூடமாக திகழ்கிறது.

இவை தவிர கந்தாஸ்ரமம், பவழக் குன்று, ரமணாஸ்ரமம், அஷ்ட லிங்கங்கள் என மலையை சுற்றி இறை வாசம் இங்கு மட்டுமே வீசுகிறது.



## 2025 ஆம் ஆண்டு திருவண்ணாமலை கிரிவல நேரம்

| தேதி | கிழமை | கிரிவலம் தொடக்க நேரம் | கிரிவலம் முடியும் நேரம் |
|---|---|---|---|
| ஜனவரி – 13 | மார்கழி பௌர்ணமி, | காலை 05.03 | ஜனவரி 14, காலை 03.56 |
| பிப்ரவரி – 11 | தை பௌர்ணமி, | மாலை 06.55 | பிப்ரவரி 12, இரவு 07.22 |
| மார்ச் – 13 | மாசி பௌர்ணமி, | காலை 10.35 | மார்ச் 14, பகல் 12.23 |
| ஏப்ரல் – 12 | பங்குனி பௌர்ணமி, | காலை 03.21 | ஏப்ரல் 13, காலை 05.51 |
| மே – 11 | சித்ரா பௌர்ணமி | இரவு 08.01 | மே 12, இரவு 10.25 |
| ஜூன் – 10 | வைகாசி பௌர்ணமி, | காலை 11.35 | ஜூன் 11, பகல் 01.13 |
| ஜூலை – 10 | ஆனி பௌர்ணமி, | அதிகாலை 01.36 | ஜூலை 11, அதிகாலை 02.06 |
| ஆகஸ்ட் – 08 | ஆடிப் பௌர்ணமி | பகல் 02.12 | ஆகஸ்ட் 09, பகல் 01.24 |
| செப்டம்பர் – 07 | ஆவணி பௌர்ணமி, | அதிகாலை 01.41 | இரவு 11.38 |
| அக்டோபர் – 06 | ஐப்பசி பௌர்ணமி, | பகல் 12.23 | அக்டோபர் 07, காலை 09.16 |
| நவம்பர் – 04 | புரட்டாசி பௌர்ணமி | இரவு 10.36 | நவம்பர் 05, மாலை 06.48 |
| டிசம்பர் – 04 | கார்த்திகை பௌர்ணமி, | காலை 08.37 | டிசம்பர் 05, அதிகாலை 04.43 |

aanmeegamalar.com

aanmeegamalar.com

# புதிய & பாதுகாப்பான உணவு
# துரித & மகிழ்ச்சியான சேவை

# FRESH & SAFE FOOD
# QUICK & CHEERFUL SERVICE

akkarai Responsible Snacking | LET'S THINNAI Relax & Recharge | The ICECREAM VAN Homely IceCream Estd. 2018 | ONDRAHA Wholesome Selling | CHOCORICH Cafe

Thattankulam | Madurai | Keezhadi

Madurai

**Shop Select Product of 'akkarai' Range**
**at www.indianfoods.in | www.akkarai.co.in**
**(Delivery Across India)**

Our 'akkarai' Madurai Franchaisees:

KK Nagar | Kamarajar Salai | Out Post | TVS Nagar | SS Colony | Keezhdi Museum

Our 'akkarai' Chennai Franchaisee:

KORATTUR Paalpannai Road

**அறிந்து கொள்வோம்**

# அறியாத அற்புதங்கள்!



✦ ஸ்ரீரங்கம் கோவிலில் ஸ்ரீராமானுஜரின் உடல் 1000 வருடங்களாக கெடாமல் அப்படியே உள்ளது.

✦ திருநெல்வேலி பாளையங்கோட்டை அருகே திருச் செந்தூர் சாலையில் உள்ள சிரட்டை பிள்ளையார் கோவிலில் விநாயகருக்கு விடலை போடும்போது சிரட்டையும், தேங் காயும் பிரிந்து சிதறுகிறது.

✦ தஞ்சைபிரகதீஸ்வரர் கோவிலில் 72 டன் கல் கோபுர உச்சியில் வைக்கப்பட்டுள்ளது. கருவறை குளிர்காலத்தில் வெப்பமாகவும் வெயில் காலத்தில் குளிராகவும் இருக்கிறது.

✦ தாராபுரம் ஐராவதீவரர் கோவி லில் உள்ள இசைப்படிகளில்தட்டி னால் சரிகமபதநிச என்ற இசை வருகிறது.

✦ கடலுக்கு 3500 அடி உயரத்தில் வெள்ளியங்கிரி மலையில் சிவனின் பஞ்சவாத்ய ஒலி கேட்கிறது.

✦ கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அருகே கோட்டையூரில் நூற்றி ஒன்று சாமிமலை குகையில் ஓரடி உயரம் கொண்ட கல்லால் ஆன அகல் விளக்கில் இளநீர் விட்டு தீபமேற்றினால் பிரகாசமாக எரியும் அதிசயம் நடக்கிறது.

✦ சென்னை வியாசர்பாடி ரவீஸ்வரர் கோயிலில்தின மும் சூரிய ஒளி மூலவர் மீது விழுகிறது. (காலை மதியம் மாலை என மும்முறை )

✦ சுசிந்திரம் சிவன் கோவிலில் ஒரு சிற்பத்தின் காதில் குச்சியை நுழைத்தால் மறு காதுவழியாக வருகிறது.

✦ திருப்பூரில் உள்ள குண்டடம் வடுக நாத பைரவர் கோவிலில் குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் பொழுது, குழந்தை இந்த மாதத்தில் இந்தந்த வடிவத்தில் இந்த விதமான Po-sitionல் இருக்கும் என்பதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்லில் சிற்பங் களாக வடித்து வைத்துள்ளார்கள் நம் முன் னோர்கள்.

✦ செங்கம் ஊரில் உள்ள, ஸ்ரீ அனுபாம் பிகை உடனுறை ரிஷபேஸ்வரர் கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை, பங்குனி மாதம் மூன்றாம் நாள், மாலை சூரிய அஸ்தமனத் தின் பொழுது, நந்தியம் பெருமான் மீது சூரிய ஒளி விழும் பொழுது, அவர் தங்க நிறத்தில் ஜொலிப்பார்.

✦வட சென்னையில் ஐயபிரம் ஆண்டுகள்.பழமையான வியாசர் பாடி ரவீஸ்வரர் சிவன் கோவி லில் 3 வேளையும் சூரிய ஒளி சிவலிங்கத்தின் மீது மாலை போல் வந்து விழுகிறது.

✦ ஜெயங்கொண்டத்தில் உள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோவிலில் உள்ள கிணற்றிற்கு அருகில் ஒரு சிங்கத்தின் சிற்பம் இருக்கும். சிங்கத்தின் வாயில் ஒரு கதவு தென்படும். அதன் மூலம் கீழே இறங்கினால் கிணற்றில் குளிக்க லாம். ஆனால் மேலேயிருந்து பார்த்தால் நாம் குளிப்பது தெரியாது.

✦ஈரோடு காங்கேயத்துக்கு அருகில், மடவிளாகம் சிவன்கோவில் குளத்தில், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு மண் பானை நிறைய விபூதி தோன்றுகிறது.

✦ மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தெப்பகுளத்தில் மீன்கள் வளராது.

✦ சேலம் தாரமங்கலம் பெருமாள் கோவிலில் ஸ்ரீராமர் சிற்பம் இருக்கும் இடத்திலிருந்து வாலி சிற்பம் இருப்பதை பார்க்க முடியும். ஆனால் வாலி சிற்பம் இருக்கும் இடத்திலிருந்து ஸ்ரீராமரைப் பார்க்க முடியாத வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

✦ சென்னை முகப்பேரில் கரிவரதராஜப்பெருமாள் கோவிலில் விளக்குகளை அணைத்துவிட்டால் பெருமாள் நம்மை நேரில் பார்ப்பது போல் இருக்கிறது.

✦ தென்காசி அருகில் புளியங்குடியில் சுயம்பு நீரூற்று வற்றி தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது பிரார்த்தனை செய்து பால் அல்லது இளநீர் விட்டால் மறுநாள் ஊற்றில் நீர் வந்துவிடுகிறது.

✦ தூத்துக்குடி மாவட்டம் செட்டியாபத்து கிராமத்தில் பெரியசாமி கோவிலில் கோவிலுக்கு நேர்ந்துவிடப்படும் பன்றி கொடை விழாவின்போது அங்குள்ள நீருள்ள தொட்டிக் குள் தலையை தானாகவே மூழ்கி இறந்துவிடுகிறது.

✦ குளித்தலை அருகில் ரத்தினகிரி மலை மேல் காகங்கள் பறப்பதில்லை.

✦ தேனி அருகில் உள்ள சிவன்கோவிலில் அவரவர் உயரத்தில் சிவலிங்கம் காட்சி தருகிறது.

✦ தூத்துக்குடி மாவட்டம் வீரபாண்டியபுரத்தில் அம்மன்கோவில் கொடை விழாவின்போது மண் பாணையில் வைக்கப்படும் கத்தி சாமி கோவிலை வலம் வந்து சேரும் வரை செங்குத்தாக நிற்கிறது.

✦ விருதுநகரில் மகான் திருப்புகழ்சாமி கோவில் திருவிழாவின்போது சுவாமிக்கு படைக்கப்பட்ட சாதத்தில் வேல் வைத்து பூஜை செய்கின்றனர். அதன் பின் எவ்வளவு பக்தர்கள் வந்தாலும் உணவு குறையாமல் வந்துகொண்டே இருக்கிறது. (வேலை எடுத்தவுடன் குறைந்து காலியாகிவிடும்) இதுபோல் உணவு தட்டாமல் வருவது அத்திரி



aanmeegamalar.com

மலையிலும் நடைபெறுகிறது.

- ✦ திருமந்திரநகர் (தூத்துக்குடி)சிவன் கோவிலில் சித்திரைத் தேர்த் திருவிழா வின்போது தேர் ஓடும் ரதவீதி மட்டும் சுடுவதில்லை.
- ✦ சென்னி மலை முருகனுக்கு அபிஷேகம் செய்யப்படும் தயிர் புளிப்பதில்லை.
- ✦ திருப்புவனம் (சிவகங்கை மாவட்டம்) அருகில் கல்லுமடை திருநாகேஸ்வரமுடையார் கோவிலில் மீனாட்சி அம்மன் 2 மாதங்களுக்கு ஒரு முறை நிறம் மாறுகிறது.
- ✦ திருநெல்வேலி கடையநல்லூர் அருகில் சுந்தரேஸ்வரபுரம் சுந்தரேஸ்வரர் கோவிலில் பிரகாரத்தில் உள்ள விளக்குகளை அணைத்துவிட்டால் வெளியே உள்ள ஒளி மூலவர் மீது விழுவதைக் காணலாம்.
- ✦ ஸ்ரீவில்லிபுத்தூரில் சிவராத்திரியன்று கொதிக்கும் எண்ணெயில் கையை விட்டு வடை சுடுகிறார் ஒரு பாட்டி.
- ✦ திருநல்லூர் கல்யாணசுந்தரேஸ்வரர் (பஞ்சவர்ணேஸ்வரர்) திருக்கோவிலில் சிவலிங்கம் 6 நாழிகைக்கு ஒரு வர்ணத்திற்கு மாறுகிறது.
- ✦ காசியில் கருடன் பறப்பதில்லை. மாடு முட்டுவதில்லை. பிணம் எரிந்தால் நாற்றம் எடுப்பதில்லை. பூக்கள் மணம் வீசுவதில்லை.
- ✦ சிவகங்கை மாவட்டம் திருப்பு வனம் அருகில் கல்லுமடை திருநாகேஸ்வரமுடையார் கோவிலில் மீனாட்சிஅம்மன் 2 மாதங்களுக்கு ஒருமுறை நிறம் மாறுகிறது.
- ✦ திண்டுக்கல் அருகே திருமலைக்கேணி முருகன் கோவிலில் அருகருகே உள்ள தெய்வானை சுனையின் நீர் எப்போதும் குளிர்ந்த நீராகவும், வள்ளிசுனையின் நீர் இரவுபகல் எந்நேரமும் வெந்நீராகவும் இருக்கிறது.
- ✦ திருக்கழுக்குன்றத்தில் தெப்பக்குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு தோன்றுகிறது. சிவனுக்கு படைக்கப்பட்ட பிரசாதத்தை கழுகு உண்ணும் அதிசயம் நடைபெற்றது.
- ✦ திருநாகேஸ்வரம் சிவன் கோவிலில் ராகுகாலத்தில் மட்டும் சிவபெருமானுக்கு செய்யப்படும் அபிஷேக பால் நீலநிறமாகிறது.
- ✦ சிக்கல் சிங்காரவேலர் கோவிலில் சூரசம்ஹாரத்திற்காக முருகன் அம்பிகையிடம் வேல்வாங்கும்போது முருகனின் திருமேனி முழுவதும் வியர்வை பெருகுகிறது. அர்ச்சகர் பட்டுத்துணியால் ஒற்றி எடுக்க துணி தொப்பலாக நனைந்துவிடுகிறது.








- ✦ நாகர்கோவில் கேரளபுரம் சிவன் கோவிலில் உள்ள ஒரு விநாயகர் ஆறுமாதகாலம் கருப்பாகவும், ஆறுமாதம் வெண்மைநிறமாகவும் காட்சி தருகிறார். அது சமயம் நாகர்கோவில் நாகராஜா கோவிலில் கொடுக்கப்படும் மண் கருப்பாகவோ வெள்ளையாகவோ இருக்கிறது.
- ✦ சிவகாசி கழுகுமலை செல்லும் வழியில் உள்ள வெம்பக்கோட்டை அருகே உள்ள துலுக்கன்குறிச்சி கிராமத்தில் உள்ள ஸ்ரீ வாழைமர பாலசுப்பிரமணியர் கோவில் உள்ளது. இங்கு வாழை மரத்துடன் பாலசுப்பிரமணியர் பக்த்தர் களுக்கு காட்சி தருகிறார்.இங்கு தினந்தோறும் சிறப்பு யாகம் நடைபெறுகிறது.
- ✦ செங்கல் பட்டு திருப்போரூர் செல்லும் வழியில் உள்ள செம்பாக்கம் கிராமத்தில் ஸ்ரீ பாலா சமஸ்தான கோவில் உள்ளது. இங்கு மகான்கள் சித்தர்களுக்க் எல்லாம் தலைவியாக கருதப்படும் ஸ்ரீ பாலாம்பிகை சன்னதி உள்ளது.இங்கு அம்மன் குழந்தை பாலாவாகவும் மூலவர் அருள்மிகு ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரியாகவும் அருள்மிகு ஸ்ரீமத் ஔஷத லலிதா மகா திரிபுர சுந்தரி விஸ்வரூப மூலிகை அம்பாள் சன்னதி உள்ளது. தமிழகத்தில் குழந்தைகளுக்கான ஸ்தலமாக செம்பாக்கம் ஸ்ரீ பாலா சமஸ்தான கோவில் உள்ளது.
- ✦ மதுரை திருப்பரங்குன்றம் திரு கூடல் மலையில் சித்தர்கள் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்த தண்டபாணி வைகுண்ட பெருமாள் சிவன் கோவில் மற்றும் கட்டிக் குளம் சூட்டுக்கோல் மாயாண்டிசுவாமிகள் ஜீவசமாதி சோமப்பா சுவாமி ஜீவசமாதி கோவில் உள்ளது.
- ✦ ஈரோடு அறசலூர் வீரப்பம் பாளையத்தில் உள்ள ஸ்ரீ கிருஷ்ண சமதி கோ சாலையில் பாதாள சிவ லிங்கம் கோவில் உள்ளது. கொங்கு மண்டல பகுதிகளில் முதல் பாண லிங்கம் கோவில் என அழைக்கப்படுகிறது. இங்கு வயதான 100 க்கு மேற்பட்ட பசுக்கள் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் கீழடியில் உள்ள பதினெண் சித்தர்கள் கோவிலில் 18 சித்தர்களுக்கு பக்தர்களே பூஜை செய்து வழிபாடு செய்யலாம்.

# பழனி முருகன் கோவில் சிறப்பு

பழனி மலையை அக்னி நட்சத்திர நாளில் சுற்றி வருவது சிறப்பானதாகும். 450 மீட்டர் உயரத்தையும் 690 படிகள் கொண்டது பழனி மலை. முருகனின் சிலை மீது வைக்கும் சிரசு விபூதி சித்தர்களின் கட்டளை படி பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. சிரசு விபூதி அற்புதமான பிரசாதமாகும். பழனி முருகனுக்கு நல்லெண்ணய், சந்தனம், பஞ்சாமிர்தம், விபூதி போன்ற பொருட்களை வைத்து அபிஷேகம் செய்யப்படுகிறது. மார்கழி மாதத்தில் பன்னீர் அபிஷேகம் செய்யப்படுகிறது.

ஒரு நாளில் ஆறு தடவை அபிஷேகம் செய்யப்படுகிறது. பழனி முருகனுக்கு பூக்கள் மாலை மற்றும் அர்ச்சனை போன்றவை செய்வது இல்லை. பழனி பஞ்சாமிர்த பிரசாதத்தை சாப்பிடுபவர்களுக்கு உடலில் உள்ள நோய்கள் சரி ஆகிவிடும்.

பழனி முருகன் கோவிலில் மட்டும் தான் கோடிக்கணக்கான காணிக்கைகள் பக்தர்களிடமிருந்து வருகிறது என்ற சிறப்பு உள்ளது.

## பழனி முருகன் கோவில் நடை திறக்கும் நேரம்:

ஒவ்வொரு கோவிலுக்கும் இந்த நேரத்தில் மட்டும் தான் நடை திறந்திருக்கும் என்று உள்ளது. அந்த நேரத்தில் தான் கடவுளை திருப்தியாக தரிசிக்க முடியும். அதே போல் பழனி முருகன் கோவில் காலை 06–AM மணி முதல் இரவு 09–PM மணி வரை திறந்திருக்கும். அந்நேரத்தில் முருகனை தரிசித்து அவருடைய அருளை பெறுங்கள்.

## பழனி முருகன் அலங்காரம் வகைகள்:

ஒவ்வொரு கடவுளுக்கும் அலங்காரம் அற்புதமாக நடக்கும். அலங்காரத்தை பார்க்க இரண்டு கண்கள் போதாது என்றே சொல்லலாம். பழனி முருகனுக்கு எந்தெந்த அலங்காரம் செய்வார்கள் என்று பார்ப்போம்.

- சன்யாசி அலங்காரம்
- பாலசுப்பிரமணியர் அலங்காரம்
- வைதிகாள் அலங்காரம்
- இராஜ அலங்காரம்
- புஷ்ப அலங்காரம்

## பழனி முருகன் கோவில் பூஜை நேரம்:

பழனி முருகன் என்னென்ன பூஜையில் எந்த அலங்காரத்தில் காட்சியளிப்பார் என்று பார்ப்போம்.

- காலை 06.40 AM மணிக்கு விளா பூஜையில் சன்யாசி அலங்காரத்தில் காட்சியளிப்பார்.
- காலை 08.00 AM மணிக்கு சிறுகாலசந்தி என்ற பூஜையில் பாலசுப்பிரமணியர் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.
- காலை 09.00 AM மணிக்கு காலசந்தி பூஜையில் பாலசுப்பிரமணியர் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.
- மதியம் 12.00 PM மணிக்கு உச்சிக்கலாம் பூஜையில் வைதிகாள் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.
- மாலை 05.30 PM மணிக்கு சாயரட்சை பூஜையில் இராஜ அலங்காரத்தில் காட்சி யளிப்பார்.
- இரவு 08.00 PM மணிக்கு அர்த்தஜாம பூஜையில் புஷ்ப அலங்காரத்தில் காட்சி யளிப்பார்.



மேல் கூறப்பட்டுள்ள நேரங்களில் சென்று முருகனை தரிசித்து அருளை பெறுங்கள்.

**வைதீகாள் பழனி முருகன் அலங்காரம் வகைகள்:**

சந்தனக்காப்பு, பூ அலங்காரம், ஆபரணங்கள், பட்டு வேட்டி மற்றும் அங்கி, கிரீடம் போன்றவை அணிவிக்கப்டும்.

'தந்தைக்கே உபதேசம் செய்தவர் முருகப்பெருமான். அழகன் முருகனாக மட்டுமல்லாமல், ஞான குருவாகத் திகழக்கூடியவர். அவருக்கு உகந்த திதி சஷ்டி திதி, உகந்த நாள் செவ்வாய்க் கிழமை.

ஒருவருக்கான வீரம், தைரியம் ஆகியவற்றை அளிக்கக் கூடிய தெய்வம் செவ்வாய் பகவான். செவ்வாய்க்குரிய அதிபதியாக முருகப்பெருமான். அதனால் செவ்வாய்க் கிழமைகளில்

அதன் காரணமாக செவ்வாய் கிழமைகளில் முருகப்பெரு மானைத் தரிசனம் செய்வது விசேஷமாக பார்க்கப் படுகிறது.

நாம் அனைவரும் இறைவனை தரிசிக்கும் போது நமக்கான செல்வம் உள்ளிட்ட தேவைகள் என்ன, எந்த பிரச்னைகளை எல்லாம் நாம் தீர்க்க விரும்புகிறோம் போன்ற வேண்டுதலை இறைவன் முன் வைப்பது வழக்கம்.

மற்ற தெய்வங்களை விட முருகப்பெருமானுக்கு ராஜ அலங்காரம், ஆண்டி கோலத்தில் காட்சி தருவது வழக்கம்.

**எப்போதெல்லாம் ஆண்டி கோலத்தை தரிசிக்கலாம்?**

அனைத்தையும் துறந்த நிலை, ஞானத்தை விரும்பக்கூடிய நிலை தான் முருகனின் ஆண்டிக் கோலம்.

யாருக்கெல்லம தீராத பிரச்னையும், தீரா நோயும் துரத்துகிறதோ அவர்கள் முருகனின் ஆண்டி கோலத்தை தரிசிப்பதால் பிரச்னைகளிலிருந்து விடுபடலாம்.

அதுமட்டுமில்லாமல் மனக்குழப்பத்தில் இருப்பவர்கள், பேச இயலாதவர்கள், மன சஞ்சலம் உள்ளவர்கள், கோபத் தின் உச்சியிலேயே இருப்பவர்கள் உள்ளிட்டோர் இயல்பு நிலைக்கு திரும்ப அவர்கள் சாத்வீக குணத்தை தரக்கூடிய, மனதிற்கு நிம்மதி அளிக்கும் ஆண்டி கோலத்தை தரிசனம் செய்வது அவசியம்.

**எப்போது ராஜ அலங்கார முருகனை வழிபடலாம்?**

புதிய வாழ்க்கையை தொடங்குபவர்கள், திருமணம் நடக்கும் போது, புதுமனை புகு விழாவிற்கான முன்னேற் பாட்டின் போதும், கிருகப்பிரவேசத்தின் போதும், வீடு விற்பதற்கான செயலை தொடங்கும் போதும், அல்லது அதை விற்கும் போதும், நாம் ராஜ அலங்கார கோலத்தில் இருக்கும் முருகப்பெருமானை தரிசனம் செய்வது நல்லது.

எளிதில் விளங்கும்படி கூறவேண்டுமானால், நம்மால் சமாளிக்கக்கூடிய பிரச்னைகளை செய்யத் தொடங்கும் போது ராஜ அலங்காரத்தை தரிசிக்கலாம். இறைவன் அந்த செயல்களை நிறைவேற துணைக்கு நிற்பார்.

அதுவே நம்மால் கையாள முடியாத மருத்துவ சிகிச்சை, நோய், கடன் பிரச்னை, வறுமை என நம்மால் கட்டுப் படுத்தமுடியாத பிரச்னைகளை தீர்க்க முருகனின் ஆண்டி கோலத்தை நாம் தரிசிப்பது உத்தமம்.

பொதுவாக முருகப்பெருமானின் எந்த ஒரு அலங்காரத்தை தரிசித்தாலும், நமக்கு ஞானத்தை தரக்கூடியவர்.


ஒருவருக்கு ஞானம் கிடைத்தாலே அவன் சரியான பாதையில் சென்று பிரச்னைகளை தீர்த்து, இன்பமான பாதையில் பயணித்து வாழ்கையை வழிநடத்துவான். அதனால் நாம் தவறாது முருகப்பெருமானை வழிபடுவது அவசியம்.




# கும்பாபிஷேகத்திற்கு கங்கை தீர்த்தம் தரும் குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில்







சிவவழிபாடுகளில் முக்கியமாக பிரதோஷ வழிபாடு உள்ளது. பிரதோஷம் நேரமான மாலை வேளையில் நந்தி பகவானுக்கும் சிவனுக்கும் ஒரேநேரத்தில் அபிஷேக வழிபாடு நடைபெறும்.

இந்த நேரத்தில் பக்த்தர்கள் நந்தி பகவானுக்கு வைக்கப் படும் வேண்டுதல்களை சிவபெருமான் தீர்த்து வைக்கிறார் என பக்த்தர்களால் நம்பபட்டு வருகிறது.

ஞாயிறு முதல் சனி வரை ஒவ்வொரு கிழமைகளில் வரும் பிரதோஷம் பலவிதமான நன்மைகளை தருகிறது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் வளாகத்தில் காசியில் இருந்து பூஜித்து காசிவிஸ்வ நாதர், காசி நந்தி மற்றும் காசி துர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசியில் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது.

பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு வழஙகபடும் கங்கைதீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெரு மானை தொட்டு வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவி லில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் கீழே காணும் எண்ணில் தொடர்பு கொண்டால், கங்கை நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் கூறப்படும், கங்கை நீர் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 9444159653.

முன்னோர்கள் திதி தர்ப்பணம் நடைபெறும் நாள்: ஆடி அமாவாசை, மாஹாளய அமாவாசை மற்றும் தை அமா வாசை தினங்களில் தர்ப்பணம் நடைபெறும்.







aanmeegamalar.com




**பரமக்குடி ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் காண வருகை தரும் பக்தர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்**

**நற்பவி என்று சொல்வோம் நன்மைகள் பல செய்வோம்**

## சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம்

# குறிச்சி ஸ்ரீ வழிவிடுபெரியநாச்சி ஸ்ரீ காசிவிஸ்வநாதர் திருக்கோவில்





**கோவில் நிகழ்ச்சிகள் விபரம்**

| | |
|---|---|
| மாதம்தோறும் பிரதோஷ வழிபாடு மற்றும் சனிபிரதோஷ விழா, பௌர்ணமி பூஜை | 14.04.2025 தமிழ்வருட பிறப்பு சிறப்பு பூஜை தொடர்ந்து சித்திரை பௌர்ணமி விழா |
| 11.01.2025 தைபூசம் செந்தில் ஆண்டவர்க்கு அபிஷேக அன்னதானம் | 09.06.2025 வைகாசி விசாகம் விழா |
| 26.02.2025 மஹாசிவராத்திரி இரவு முழுவதும் அபிஷேகம் பூஜை வழிபாடு | ஆடி அமாவாசை, புரட்டாசி மாஹாளய அமாவாசை தினங்களில் காலை 7 மணிமுதல் 12 மணிவரை முன்னோர்கள் தர்ப்பண பூஜை அன்னதானம் |
| 11.04.2025 பங்குனி உத்திர விழா அபிஷேகம் அன்னதானம் | ஐப்பசி அன்னாபிஷேகம், திருக்கார்த்திகை தீப விழா |
| | 02.07.2025 சிறப்பு பூஜை வழிபாடு |

**கோவில் கும்பாபிஷேகத்திற்கு இலவசமாக கங்கை தீர்த்தம் வழங்கப்படுகிறது தமிழகத்திலேயே காசி சிவனுக்கு கங்கை தீர்த்தம் அபிஷேகம் செய்து பக்தர்கள் அனைவரும்தொட்டு வழிபடும் கோவிலாகும்.**



இறைபணியில்


**S.P.தேவர்**
**புபேஸ் ரியல் எஸ்டேட்**
22, பனகல் பார்க், சென்னை17
செல்: 9444159653,
9444638782, 9443020577,
9176242221 9566183703
வீடு 04423751097




aanmeegamalar.com



# நடுப்பழனி முருகன்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தாலுக்காவில் அச்சரப்பாக்கத்தின் அருகில் உள்ளது பெருங்கரணை கிராமம். இங்கு 10 அழகிய ஆலமரங்களுக்கு இடையே கனகமலை எனும் நடுபழனி மலை அமைந்துள்ளது. அதன் மேற்கு அடிவாரத்தில் 45 அடி உயரத்தில், அற்புதமான முருகப்பெருமான் பக்தர்களுக்கு காட்சியளித்து அருள் பாலிக்கிறார்.

மலையின் கீழ்வாரத்தில் உள்ள ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி பாதங்கள் மிகச் சிறப்பாக அழகுடன் காட்சி தருகின்றன. மேலும், இதனருகே மேற்கு பக்கமான மலையின் உயரம் 300 அடியாகும். இதில் ஏறுவதற்கு, 128 வசதியான படிகளும், வாகனங்கள் மேலே செல்வதற்கு சாய்வான சாலை வசதியும் செய்யப்பட்டுள்ளது.

படிகள் மூலம் கோவிலுக்கு செல்வோர் முதலில் இடும்பன் சுவாமி சன்னதியையும், அதன் எதிரில் ஸ்ரீ ஆஞ்சனேயர் சன்னதியையும் காணலாம். சில படிகள் ஏற ஆலயம் வரும். கணபதி, தத்தாத்ரேயர் சன்னதிகளுக்கு, நடுநாயகமாக மரகதக் கல்லாலான ஸ்ரீ தண்டா யுதபாணி, கண் கவரும் வெள்ளி மயில் தோகை பின்புலத்தில் விரித்திருக்க, கிழக்கு நோக்கி அருள்மழை பொழிகிறார்.

ஆலய மஹா மண்டபத்தின் இடது புறத்தில், வள்ளி தெய்வானை சமேதராய் ஷண்முகப் பெருமான் காட்சி தருகிறார். வலது புறம் விநாயகர், பிரம்மா. இது தவிர ருத்ரன் வடிவமான தத்ராத்ரேயர், லக்ஷ்மி, நாக தத்ராத்ரேயர சரஸ்வதி, பார்வதி வடிவமான அனகால க்ஷ்மி ஆகியோரையும் தரிசிக்கலாம். வேம்பு மரத்தடியில் நாகப்பிரதிஷ்டையும், சரவணப் பொய்கை எனும் நீருற்றும் உள்ளன. இடது புறத்தில் உள்ள ருத்ராக்ஷ மண்டபத்தில் வள்ளிதெய்வானை சமேத ஆறுமுக சுவாமி, மயிலின் மீதமர்ந்து தரிசனம் தருகிறார். அறுபடைவீடுகளின் புடைப்புச் சிற்பங்கள் அழகுடன் காணப் படுகின்றன.

திருமணங்கள் விரைவில் தடையேதும்இல்லாதுநடக்கவும், மக்கட்பேறு பெறவும்,ஏனைய விருப்பங்கள்நிறைவேறவும் பக்தர்கள்இத்திருக்கோவிலில் முருகனை வேண்டிக் கொள்கின்றனர்.

தொடர்ந்து ஆறு செவ்வாய்க்கிழமை விரதமிருந்து வழிபட்டால் பலன் கிடைப்பதாகவும் கூறுகின்றனர். இத்திருக்கோயிலில் பங்குனி உத்திரம், சஷ்டி, திருக் கல்யாணம்,



கார்த்திகை தீபம், ஸ்ரீ முத்துசுவாமி சித்தர் குருபூஜை ஆகிய விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

பாத யாத்திரையாக வரும் பக்தர்கள் விழாக் காலங்களில் சிறப்பு ருத்ராட்ச காவடி எடுத்து முருகனை வழிபடுவது இக்கோயிலின் சிறப்பு ஆகும். விரிவாக்கம் செய்யப்பட்ட அழகிய குளம் உள்ளது. விழாக் காலங்களில் அன்னதானம் உண்டு. பவுர்ணமி கிரி வலம் நடப்பதாகக் கூறுவர். விழாக்களில் ஏகதசருத்ரம் மற்றும் திருப்புகழ் பாராயணத்துடன் வேல்காவடி வழிபாடு நடைபெறுகிறது.

மலை உச்சியில், ஆலயம் அருகில், இத்தகைய அருட் கோவில் உருவாகக் காரணமாயிருந்த, ஐயா முத்துசுவாமி சித்தரின், ஜீவ சமாதி மண்டபமும் உள்ளது. மலை அடிவாரம், கணபதி, அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், திருப்போரூர் சிதம்பரம் சுவாமிகள் ஆகியோர் திரு உருவங் கள் உள்ளன. ராஜேஸ்வரி அம்மன், நவ கிரகங்கள் சன்னதி ஆகியனவும் உண்டு. அடிவாரத்தில் சுவாமிகளின் நெருங்கிய நண்பர் முறப்பாக்கம் சுவாமிகளின் சமாதியும் காணப்படுகிறது.

சுமார் 4 ஆண்டுகள் இவ்விடத்தில் தவமிருந்த பொள்ளாச்சி ஐயா முத்துசுவாமி அவர்களின் கனவில், முருகப் பெருமான், அழகிய குழந்தை வடிவத்தில் தோன்றினார். புண்ணியத்தலமான பெருங்கருணையில உள்ள மலையில், தான், கோவில் கொண்டு, அருள உத்தேசித்திருப்பதை அவருக்கு உணர்த்தினார். அதன்படி, பெரும் கருணையில், உள்ள மலையை, கண்டுபிடித்தார். அதன் உச்சியில், வேலாயுதத்தை நிறுவி, வழிபாடு செய்யத் தொடங்கினார். அன்னாரது 50 ஆண்டு கடின உழைப்பில் உருவானதுதான் நடுபழனி முருகன் திருக்கோவில் ஆகும்.

மஹான் காஞ்சிப் பெரியவர் ஒருமுறை இங்கு வரும்போது, ஆலயத்தில் முருகப் பெருமான், சாட்சாத் பழனியிலுள்ள தண்டாயுதபாணியாகவே காட்சி கொடுக்க, இத்தலத்தை 'நடு பழனி' என்ற நாமகரணமிட்டு அழைத்தார். மேலும் மூலவர் சிலையை, மரகத சிலையாக வடித்து எடுத்து அங்கு, புத்தம் புதிய ஸ்ரீ தண்டாயுதபாணி, 1993 ஆம் ஆண்டில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இப்படிப்பட்ட முருகப் பெருமானின் பேரருளைப் பெற்ற ஐயா முத்துசுவாமி சித்தர், பல சித்து விளையாட்டுகளை, பொது மக்களின் நன்மைக்காக மட்டுமே செய்து வந்தார். இவர் தரும் விபூதி, பற்பல வியாதிகளைக் குணப்படுத்தும் என இங்கு பரவலாகச் கூறப்படுவதுண்டு. கூடு விட்டு கூடு பாயும் வல்லமையும் இவர் பெற்றிருந்தார் எனச் சொல் லப்படுகிறது.

சித்தர்களுக்கு, தனது காலம் முடியப் போகிறது எனத் தெரிந்துவிடும் என்பதற்கு, பல உதாரணங்கள் உண்டு. ஐயா முத்துசாமி சித்தருக்கும் அது தோன்ற, உடன் தனது கடமைகளை சரிவர செய்யத் தகுந்தவர் யார் என யோசிக்க, மைசூர் ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமிகளின் உருவம், மனக்கண் முன் வந்தது. உருவம் வந்தது மட்டுமல்ல ஐயா கணபதி சச்சிதானந்த சுவாமிகளும் சில காலங்களில் தானே நடுபழனிக்கு வந்து, தனக்கும் அதே போன்ற கனவு வந்தது எனக்கூறி, மனது பூரிப்படைந்தனர். இவ்வளவு பெரிய ஆன்றோர் பெருமக்களின் அருள்பக்தியால் பசுமையான இப்பெருங்கரணையில், அற்புதமான இந்த நடுப்பழனி முருகப்பெருமானை தரிசிக்கும் வாய்ப்பு நம் வாழ்நாளில் ஏற்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு சென்று வருபவர்கள் வாழ்வில் ஏற்றத்தை பெறுவது நிச்சயமே.


அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை

M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்

A.T.T.லாட்ஜ் அகிலா காம்ப்ளக்ஸ்








அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்






பைபாஸ்ரோடு, மானாமதுரை

மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்

செல்: 98424 68215 / 73737 68215

# ஆயுள் வேண்டி வணங்க வேண்டிய கோவில்கள்.....



1. அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில்,திருக்கடையூர்,
2. அருள்மிகு எமனேஸ்வரமுடையார் திருக்கோவில், எமனேஸ்வரம், பரமக்குடி
3. அருள்மிகு காலகாலேஸ்வரர் திருக்கோவில், கோவில்பாளையம்,
4. அருள்மிகு சித்திரகுப்தசுவாமி திருக்கோவில், காஞ்சிபுரம்,
5. அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோவில், வேளச்சேரி,
6. அருள்மிகு ஸ்ரீலிவனேஸ்வரர் திருக்கோவில். திருப்பைஞ்ஞீலி.
7. அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோவில், வாஞ்சியம்.

## முக்கியமான முருகன் கோவில் மலைகளின் படிகளின் எண்ணிக்கை...



| | |
|---|---|
| ஒதி மலை: | 1880 படிகள் |
| சென்னி மலை: | 1320 படிகள் |
| மருதமலை: | 837 படிகள் |
| பழனி மலை: | 689 படிகள் |
| அனுவாவி: | 500 படிகள் |
| சிவன் மலை: | 496 படிகள் |
| திருத்தணி: | 365 படிகள் |
| விராலிமலை: | 207 படிகள் |
| பவள மலை: | 200 படிகள் |
| பொன் மலை: | 200 படிகள் |
| பச்சை மலை: | 180 படிகள் |
| திண்டல்: | 150 படிகள் |
| கரட்டுமேடு: | 150 படிகள் |
| குருந்தமலை: | 108 படிகள் |
| சுவாமி மலை: | 60 படிகள் |
| திருப்பரங்குன்றம்: | 50 படிகள் |

## பன்னிரு ஜோதிலிங்கத் ஸ்தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கேதாரம் (இமயம்) | கேதாரேஸ்வர்ர் |
| 2. | சோமநாதம் (குஜராத்) | சோமநாதேஸ்வரர் |
| 3. | மகாகாளேசம் (உஜ்ஜயினி) | மகாகாளேஸ்வரர் |
| 4. | விசுவநாதமே (காசி) | விஸ்வநாதேசுவரர் |
| 5. | வைத்தியநாதம் (மகாராஷ்டிரம்) | வைத்திநாதேசுவரர் |
| 6. | பீமநாதம் (மகாராஷ்டிரம்) | பீமநாதேசுவரர் |
| 7. | நாகேஸ்வரம் (மகாராஷ்டிரம்) | நாகநாதேசுவர்ர் |
| 8. | ஓங்காரேஸ்வரம் (மத்தியப் பிரதேசம்) | ஓங்காரேசுவரர் |
| 9. | த்ரயம்பகம் (மகாராஷ்டிரம்) | த்ரயம்பகேசுவரர் |
| 10. | குசமேசம் (மகாராஷ்டிரம்) | குஸ்ருணேச்சுவர்ர் |
| 11. | மல்லிகார்சுனம் ஸ்ரீசைலம் (ஆந்திரம்) | மல்லிகார்ச்சுனர் |
| 12. | இராமநாதம் (அராமேஸ்வரம்) | இராமநாதேஸ்வரர் |

## தேவாரம் பெற்ற தலங்கள்



1. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தலங்கள் 44.
2. சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிய தலங்கள் 52.
3. சம்பந்தரும், சுந்தரரும் பாடிய தலங்கள் 13.
4. அப்பரும், சுந்தரரும் பாடிய தலங்கள் 2.
5. சம்பந்தர் மட்டும் பாடிய தலங்கள் 111.
6. அப்பர் மட்டும் பாடிய தல மொத்தம் 275.
7. இவற்றுள் மாணிக்கவாசகர் பாடிய தலங்கள் 25

## அட்ட வீரட்டத் ஸ்தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருக்கண்டியூர் | பிரமன் சிரம் கொய்தது |
| 2. | திருக்கோவலூர் | அந்தகாசுரனைச் சங்கரித்தது |
| 3. | திருஅதிகை | திரிபுரத்தை எரித்தது |
| 4. | திருப்பறியலூர் | தக்கன் சிரங்கொய்தது |
| 5. | திருவிற்குடி | சலந்தராசுரனைச் சங்கரிதத்து |
| 6. | வழுவூர் (வைப்புத்தலம்) | யானையை உரித்தது |
| 7. | திருக்குறுக்கை | காமனை எரித்தது |
| 8. | திருக்கடவூர் | யமனை உதைத்தது |



aanmeegamalar.com

## நந்தியுடன் தொடர்புடைய ஸ்தலங்கள்



1. நந்தி சங்கம தலம் கூடலையாற்றூர் திருநணா (பவா நிகூடல்).
2. நந்தி விலகியிருந்த தலங்கள் பட்டீச்சுரம் (சம்பந்தருக்காக), திருப்புன்கூர் (நந்தனாருக்காக), திருப்பூந்துருத்தி (அப்பர், சம்பந்தருக்காக)
3. நந்திக்குக் கொம்பு ஒடிந்த தலம் திருவெண்பாக்கம்.
4. நந்திதேவர் நின்ற திருக்கோலம் திருமாற்பேறு.
5. நந்தி தேவருக்குத் திருமணம் நடக்கும் தலம் திருமழபாடி.
6. திருக்கீழ்வேளூர் – ஒரு பக்தையின் பொருட்டு.
7. திருநள்ளாறு – ஒரு இடையனுக்காக

## முக்தி அளிக்கும் ஸ்தலங்கள்

| | |
|---|---|
| 1. திரு ஆரூர் | பிறக்க முக்தி தருவது |
| 2. சிதம்பரம் | தரிசிக்க முக்தி தருவது |
| 3. திருவண்ணாமலை | நினைக்க முக்தி தருவது |
| 4. காசி | இறக்க முக்தி தருவது |

## பஞ்சபூத ஸ்தலங்கள்

| | |
|---|---|
| 1. திரு ஆரூர் (அ) காஞ்சிபுரம் | பிருதிவி (நிலம்) |
| 2. திரு ஆனைக்கா | அப்பு (நீர்) |
| 3. திருவண்ணாமலை | தேயு (தீ) |
| 4. திருக்காளத்தி | வாயு (வளி) |
| 5. சிதம்பரம் | ஆகாயம் (விசும்பு) |

## நடராஜருக்குரிய பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு இரத்தின சபை
2. சிதம்பரம் கனகசபை (பொன்னம்பலம்)
3. மதுரை ரஜதசபை (வெள்ளியம்பலம்)
4, திருநெல்வேலி தாமிர சபை
5, திருக்குற்றாலம் சித்திர சபை



## சிறப்புத் தாண்டவத் ஸ்தலங்கள்

| | |
|---|---|
| 1. தில்லைச் சித்திரக் கூடம் | ஆனந்த தாண்டவம் |
| 2. திரு ஆரூர் | அசபா தாண்டவம் |
| 3. மதுரை | ஞானசுந்தர தாண்டவம் |
| 4. புக்கொளியூர். | ஊர்த்துவ தாண்டவம் |
| 5. திருமுருகன் பூண்டி | பிரம தாண்டவம் |

## சிவராத்திரி வழிபாட்டுக்கு ஏற்ற ஸ்தலங்கள்

1. கச்சி ஏகம்பம்
2. திருக்காளத்தி
3. கோகர்ணம்
4. திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்)
5. திருவைகாவூர்



## காசிக்கு ஈடான ஸ்தலங்கள்

1. திருவெண்காடு
2. திருவையாறு
3. மயிலாடுதுறை
4. திருவிடை மருதூர்
5. திருச்சாய்க்காடு
6. திருவாஞ்சியம்




ஸ்ரீ வணங்காமுடி சேம்பர் பிரிக்ஸ்

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எந்திரம் மூலம் தயார் செய்யப்படும் வயர்கட் செங்கல் உற்பத்தியாளர்கள்




மதுரை-ராமேஸ்வரம், பைபாஸ் ரோடு மானாமதுரை

செல்: 98424 28626 / 98424 68628



# ஒவ்வொரு ராசிக்குரிய முருகன் கோயில்கள்!!





எல்லா முருகன் கோவிலும் சிறப்புதான்...
முருகன் என்றாலே சிறப்புதானே...

முருகன் கோவில்களில் முதன்மையான கோயில்.. மயிலம் சுப்பிரமணியர் கோயில் செவ்வாயின் ஆதிக்கம் அதிகம் உள்ள முருகன் கோயில் இது. திண்டிவனம் அருகே உள்ளது இந்த கோயில். ஒரு முறை சென்று வாருங்கள்... வாழ்வில் நல்ல மாற்றத்தை உணர்வீர்கள்..

மேலும் செவ்வாய் ஆகர்ஷனம் அதிகம் உள்ள கோயில்கள் பற்றின விவரங்கள் கீழே...

இதன் விசேஷம் என்னவென்றால் இதன் அருகே உள்ள மண் எல்லாம் சிவப்பு நிறமாகத் தான் இருக்கும்.

ராசிப்படி முருகன் கோயில்கள்..

**மேஷம்:** தாண்டுகுடி முருகன் கொடைக்கானல்,
**ரிஷபம்:** சுவாமிமலை:
**மிதுனம்:** செவலூர் பூமினாதேஸ்வரர்
**கடகம்:** பழனி முருகன்
**சிம்மம்:** திருபரங்குன்றம் முருகன்
**கன்னி:** திருசெந்தூர் முருகன்
**துலாம்:** வைதீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமி
**விருச்சிகம்:** மன்னச்சநல்லூர் பூமி நாதேஸ்வரர்:
**தனுசு:** திருத்தணி
**மகரம்:** வயலூர் முருகன்
**கும்பம்:** ஓரக்காட்டு பேட்டை குணம் தந்த நாதர் செங்கல்பட்டு அருகில்
**மீனம்:** திருவக்கரை பத்ர காளி

குறிப்பிட்ட கோயில்களில் உள்ள முருகனை, குறிப்பிட்ட ராசிகாரகள் வழிபட நன்மை நிச்சயம் உண்டு.

## முருகனும் 12 கைகளும்

முருகனின் பன்னிருகரங்களில் இரு கரங்கள் தேவர்களையும், முனிவர்களையும் காக்கின்றன.

மூன்றாவது கை அங்குசத்தினைச் செலுத்துகிறது.

மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் பதிந்திருக்கிறது.

ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச்சுழற்றுகின்றன.

ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது.

எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது.

ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கிறது.

பத்தாவது கை மணியை ஒலிக்கிறது.

பதினோராவது கை மழையை அருள்கிறது.

பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது.

## பழநி முருகனை காக்கும் காவிரி நதி

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடி அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும். அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும்.



திண்டுக்கல் மாவட்டமும், அதைச்சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து, சைவ சமயத்தவர்கள்,ஈரோடு மாவட்டம், கொடுமுடிக்குச் சென்று காவிரி நதியில் தீர்த்தம் (புனிதநீர்) கொண்டுவந்து, பழனியில் போகரால் நிறுவப்பட்ட நவபாசாண முருகனுக்கு செலுத்துவார்கள். பங்குனியில் வெயில் கடுமையாக இருக்கும், நவ பாசாணத்தால் ஆன முருகன் சிலை வெப்பத்தால் சிதைந்து போகாமல் இருக்க மூலிகைகள் கலந்த காவிரி நதியின் நீரால் குளிர்விப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திருவிழா பங்குனி உத்தரம் திருவிழா.

aanmeegamalar.com

# பழனி முருகனின் தரிசனப் பலன்கள்

கலியுகத்தில், நாம் செய்த கர்மவினைகளை குறைக்கக் கூடிய மாபெரும்சக்தி முருகப் பெருமானுக்கு உள்ளது.

பழனி மலைக்கு சென்று முருகனை தரிசனம் செய்தால் நம்முடைய கர்மவினைகள் குறையும். கர்ம வினைகளால் ஏற்படும் நம்முடைய பிரச்சனைகள் தீர பழனி முருகனை எப்படி வழிபாடு, பூஜை செய்வது என்ற தேவ ரகசியம் தெரியுமா?



வாழ்வில் தடை போட்டி பொறமை கஷ்டம் போன்ற பல பிரச்சனைகள் விலக ஆண்டிகோலத்தில் இருக்கும் பழனியாண்டவர் முருகனை தரிசனம் செய்வதால் நன்மைகள் பல உண்டாகும்

பழனி முருகப்பெருமானை ஆண்டி கோலத்தில் இருக்கும்போது தரிசனம் செய்தால் நம்மை ஆண்டியாக ஆக்கி விடுவார் என்றும், ராஜ அலங்காரத்தில் இருக்கும் போதும் மட்டுமே தரிசனம் செய்தால் ராஜ வாழ்க்கை கிடைக்கும் என்றும் பலர் சொல்ல கேட்டிருப்பீர்கள்.

ஆனால் உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தீராத துயரத்தை அனுபவித்து வந்தால், அதிகப்படியான தடைகள் உங்களுடைய வாழ்க்கையில் இருந்தால் நீங்கள் பழனி முருகனை தண்டாயுதபாணி கோலத்தில் அதாவது ஆண்டி அலங்காரத்தில் தரிசிப்பது தான் சிறந்தது

முற்றும் துறந்த தவ நிலை, அதாவது அலங்காரம் இல்லாமல் ஆண்டிக் கோலத்தில்பார்க்கும்போது நமக்குள் ஒரு மெய் ஞானம் உண்டாகும் என்பதற்காக. பெரிய ஞானிகளெல்லாம் அந்தக்கோலத்தைக் காண்பதற்காகத்தான் துடிப்பார்கள்.

முற்றும் துறந்தவர்கள், குடும்பத்தில் பல நிலைகளைக் கடந்தவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தை விரும்பிப் பார்ப்பார்கள்.

ஜோதிடப்படி பார்க்கும் போது செவ்வாய் கிரகம் முருகனுக்கு வருகிறார். அதிலும் இந்த பழனி முருகன் ஞான காரகனாக இருக்கிறார். மேலும், இந்தச் செவ்வாயுடன் குருவும் கலக்கிறார். வீரம், தைரியம் இதற்கெல்லாம் உரியது செவ்வாய்.

இந்த வீரமும், தைரியமும் இருந்ததால்தான் எல்லோரையும், எல்லா வற்றையும் உதறித் தள்ளி விட்டு அவர் இங்கு வந்து நிற்க முடிந்தது. ஆனால் நின்ற உடனேயே அங்கு குரு வந்து விடுகிறார். செவ்வாயாக வீராவேசத்துடன் கிளம்பி குருவாக நிற்கிறார்.

வழக்குகளெல்லாம் நடக்கிறது, தீராத நோய்களெல்லாம் இருக்கிறது போன்ற பிரச்சனைகளுக்கு அலங்காரம் இல்லாத முருகனை வணங்குவதே நன்று.

20 வருடமா வாதாடிக் கொண்டிருக்கிறேன். தீர்ப்பு தள்ளி தள்ளிப் போகிறது என்றால் அதற்கு அலங்காரம் இல்லாத ஆண்டிக் கோல முருகன் வழிகாட்டுவார்.

தீராத நோய், மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள், அவ்வளவுதான் என்ற நிலையில் அதற்கும் நீங்கள் முருகனின் ஆண்டி கோலத்தை தரிசிக்கலாம்.

மன குழப்பத்தால் அவதி அடைபவர்கள் ஆண்டிக் கோல முருகனை வழிபடச் சொல்லலாம். அவர்களின் மன நிலையில் மாற்றங்கள் ஏற்படுவதை கண்கூடாகப் பார்க்கலாம்.

பேச இயலாதவர்கள், குறைபாடு உள்ளவர்கள், மன எழுச்சி, மனஉளைச்சல் உள்ளவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தைப் பார்த்தால் ஒரு சாத்வீகம், சமத்துவம் அவர்கள் மனதிற்குள் பாயும் இது இக்கோவிலின் தேவ ரகசியமாகும்.

திங்கள் கிழமையில் காலைநேரத்தில் மலையேறி முருகப் பெருமானை ஆண்டி கோலத்தில் தரிசித்தால், வாழ்க்கையில் இருக்கக்கூடிய தடைகள் அனைத்தும் நிவர்த்தியாகி படிப் படியான முன்னேற்றம் மாற்றம் ஏற்படும்.




# ஸ்ரீ காளஹஸ்தி கோவில்



ஆந்திரபிரதேசத்தில் உள்ள காளஹஸ்தி நகரத்தில் உள்ளது. தென்னிந்தியாவில் மிக பிரபலமான சிவன் கோவில்.

இந்த இடத்தில் தான் கண்ணப்ப நாயனார் தன் கண்களை எடுத்து சிவனுக்கு கொடுக்க முனைந்த இடமாக புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பதி கோவிலில் இருந்து 36 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது ஸ்ரீகாளஹஸ்தி கோவில். இந்த கோவிலில் பஞ்சபூத ஸ்தலங்களுள் வாயுலிங்கத்திற்கு மிகவும் புகழ் பெற்ற தலமாக உள்ளது.

இந்த கோவிலுக்கு வேறு சில முக்கியத்துவமும் உண்டு. இதனை ராகு கேது ஸ்தலம் என்றும் தக்ஷின கைலாசம் என்றும் அழைக்கிறார்கள். இந்த கோவிலின் உட்புறம் ஐந்தாம் நூற்றாண்டிலும் வெளிப்புற கட்டமைப்பு 11 ஆம் நூற்றாண்டிலும் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது. இங்கு சிவன் வாயு ரூபத்தில் காளஹஸ்தீஸ்வரா என்ற பெயரில் வழிபடப்படுகிறார்.

வாயு தேவர் இங்கே சிவபெருமானை கற்பூர லிங்கமாக வழிபட்டுள்ளார் அவர் தவத்தில் மெச்சிய சிவபெருமான் வாயுவிற்கு அருளி இங்கே தரிசனம் தந்ததாகவும் அவர் கோரிய வரத்தின் பேரிலேயே இங்கே அவர் வாயுலிங்கமாக தங்கி தரிசனம் தருகிறார்.

இங்கே நூறு தூண் மண்டபம் விஜயநகர பேரரசான கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. இதன் மூலவர் சிவலிங்கம் வெள்ளை நிற கல்லால் ஆனது. இது பார்க்க யானையின் தந்தம் போன்ற வடிவில் இருந்தது. இந்த கோவிலை தென்னகத்தின் காசி என்றழைக்கிறார்கள். இந்த ஒரு கோவில் தான் சூரிய கிரகணம், மற்றும் சந்திர கிரகணம் ஆகிய நாட்களில் திறந்திருக்கும் அதிசயம் நிகழ்கிறது. ஜோதிட பரிகார ஸ்தலங்களுள் மிக முக்கியமானது இந்த கோவில். இந்து புராணங்களில் படி, காளஹஸ்தீஸ்வரரை பிரம்ம தேவர் நான்கு யுகத்திலும் வணங்கியுள்ளார். மஹாபாரதத்தின் அர்ஜுனரும் இங்கே சிவபெருமானை வழிபட்ட குறிப்புகள் உண்டு.

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், நக்கீரர், ஆகிய அனைவரும் இந்த கோவில் குறித்து பாடல் பாடியுள்ளனர். இங்கே நடைபெறும் சிவராத்திரி விழா 13 நாட்கள் நடக்கும் திருவிழா. இந்த நாட்களில் சிவபெருமனை தரிசிக்க இங்கே இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்றனர்.

# சிவபெருமானின் 25 அவதாரங்களும் அவதாரங்களுக்குரிய இருப்பிடங்களும்

1. சோமாஸ்கந்தர் .................... திருவாரூர்
2. நடராஜர் .................... சிதம்பரம்
3. ரிஷபாரூடர் .................... வேதாரண்யம்
4. கல்யாணசுந்தரர் .................... திருமணஞ்சேரி
5. சந்திரசேகரர் .................... திருப்புகலூர்
6. பிட்சாடனர் .................... வழுவூர்
7. காமசம்ஹாரர் .................... குறுக்கை
8. காலசம்ஹாரர் .................... திருக்கடயூர்
9. திரிபுராந்தகர் .................... திருவதிகை
10. கஜசம்ஹாரர் .................... வழுவூர்
11. வீரபத்திரர் .................... கீழ்ப்பரசலூர் என்ற திருப்பறியலூர்
12. தட்சிணாமூர்த்தி .................... ஆலங்குடி
13. கிராதகர் .................... கும்பகோணம்
14. கங்காளர் .................... திருச்செங்காட்டங்குடி
15. சக்ரதானர் .................... திருவீழிமிழலை
16. கஜமுக அனுக்கிரக மூர்த்தி .................... திருவலஞ்சுழி
17. சண்டேச அனுக்கிரகர் .................... கங்கை கொண்ட சோழபுரம்
18. ஏகபாதமூர்த்தி .................... மதுரை
19. லிங்கோத்பவர் .................... திருவண்ணாமலை
20. சுகாசனர் .................... காஞ்சிபுரம்
21. உமாமகேஸ்வரர் .................... திருவையாறு
22. அரியர்த்த மூர்த்தி .................... சங்கரன்கோவில்
23. அர்த்தநாரீஸ்வரர் .................... திருச்செங்கோடு
24. நீலகண்டர் .................... சுருட்டப்பள்ளி
25. சலந்தராகரர் .................... திருவிற்குடி.



aanmeegamalar.com

aanmeegamalar.com



ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

ஆறுபடை முருகன் கோவில்களில் நடைபெறும் தைப்புச விழா காண வருகை தரும் பக்தர்களை வருக வருக பழனிமலை முருகன் அருள் பெறுக...













# ஸ்ரீ தர்ம சாஸ்தா கலைக்கூடம்

## PS.A.கண்ணன் ஸ்தபதி



புதிய கோபுர திருப்பணிகள், பழைய கோபுரங்கள் மராமத்து வேலைகள், வர்ண வேலைகள், கல்திருப்பணிகள் மற்றும் கல் சிலைகள், சிறந்த முறையில் செய்து தரப்படும்




Res: 9655384707
செல்: 9442042858
9585055183
8072848048

கண்ணங்காரக்குடி (சாஸ்தார்கோவில்) இராமச்சந்திரபுரம் (Po)
திருமயம் (TK) புதுக்கோட்டை மாவட்டம்-622 505

# சோட்டாணிக்கரை அம்மனுக்கு நிகரான
# வெற்றி பாலா கோவில்





சக்தியின் வடிவங்கள் பல. காஞ்சியில் காமாட்சி, மதுரையில் மீனாட்சி, நெல்லையில் காந்திமதி, சங்கரன் கோவிலில் கோமதி தாயார், மேலும் கன்னியம்மன், மாரியம்மன், செல்லியம்மன், காளியம்மன் என்றெல்லாம் அம்மனை வெவ்வேறு பெயர்களின் சொல்லி வழிபடுகிறோம். ஒவ்வொரு வடிவமாகக் கொண்டிருக்கும் அம்பிகையைக் கொண்டாடுகிறோம்.

அந்த வடிவங்களில் மிகவும் வித்தியாசமானது... வித்தியாசமானவள்... நம்மை குழந்தை போல் பாவித்து அருள்பாலிக்கும் அன்னையே, குழந்தையாக, சிறுமியாக இருந்து அருள்பாலிக்கும் தெய்வம்... ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி.

பாலா திரிபுரசுந்தரி கருணைக் கடல். அன்பே உருவெனக் கொண்டவள். அருளையே வடிவமெனக் கொண்டவள். தீயதை அழிப்பதையே காரணமாகக் கொண்டு காட்சி தருபவள்.

பாலா திரிபுரசுந்தரியை வணங்குங்கள். அவளின் காயத்ரியைச் சொல்லுங்கள். ஒரு பத்துநிமிடம் கண்கள் மூடி, எந்தநாளாக இருந்தாலும் அவளிடம் உங்கள் குறைகளையெல்லாம் சொல்லி முறையிடுங்கள். சொன்ன சொல் மாறாத குழந்தையென ஒரு தாயைப் போல் ஓடிவந்து நம்மைக் காத்தருள்வாள் தேவி.

அந்த தேவி பல்வேறு வடிவங்களில் காட்சியளித்தாளும், திருவள்ளூர் ரெட்டில்ஸ் மெயின்ரோட்டில் கீழனூர் கிராமத்தில் ராகவா கிளினிக் அருகில் அமைந்துள்ள ஸ்ரீ வெற்றி பாலா கோவில்.

பாலா கோவில்கள் தமிழகத்தில் பரவலாக காணப்பட்டாலும் இந்தக் கோவிலுக்கு தனிப்பட்ட பல்வேறு விஷேஷங்கள் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்தக் கோவிலில் உள்ள விஷேஷங்கள் மற்றும் சிறப்பு குறித்து பிரபல பாடகர் வீரமணிராஜூ அவர்கள் கூறும்போது, இக்கோவில்குறித்து தேவ பிரசன்னம் பார்த்தபோது, இத்திருக்கோவில் சோட்டானிக்கரை பகவதி அம்மனுக்கு இணையான அம்மன் குடிகொண்டுள்ளதாக பிரசன்னத்தில் கூறப்பட்டதாக கூறுகிறார்.

கடந்த பல ஆண்டுகளாக இந்த கிராமத்தில் ஸ்ரீகாமாக்ஷியும், வெற்றி பாலாவும் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றனர். தற்பொழுது அதே ஆலயத்தில் மேலும் சில சன்னதிகளை அமைத்துக்கொள்ள, வாலையவள் ஸ்ரீ பாலா எண்ணிய எண்ணமிட்டிருப்பாள் போலும்.









அதன் அடிப்படையில் விநாயகர், சிவபெருமான் முருகப் பெருமான் ஆகிய மூவரையும் இணைத்துக்கொண்டு மிக ரம்மியமான சூடிலில் பக்தர்களுக்கு ஆனந்தமாகக் காட்சி யளிக்கிறாள்.

இந்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் கடந்த 2.2.2025 அன்று, மலையாளதேசத்துக் கலாச்சார அடிப்படையில் ஸ்ரீ சித்தாச சுவாமிகளின் நல்லாசியோடு, திரு.ஆனந்த் சுப்ர மணிய நம்பூதிரிகள் தலைமையில் கோலாகலமாக இனிதே நடைபெற்றது.

சித்தர்களின் வழிபாட்டு முறைப்படியே, இங்கு அனைத்து பூஜைகளும் நடைபெற்று வருகிறது. மேலும், அரசமரம் மற்றும் வேப்பமரம் இணைந்திருக்கும் இடத்தில் முனீஸ்வரரும், நாகராஜர் நாகராணியோடு காட்சிதருவது ஆலயத்திற்கு மேலும் சிறப்பூட்டுகிறது.

மாதந்தோறும் ஆங்கில மாத முதல் ஞாயிற்று கிழமைகளில் ஸ்ரீமத் சத்யநாராயண பூஜை நடைபெற்று வருகிறது. ஐயப்ப பூஜை, பகவதி சேவை மற்றும் சோட் டாணிக்கரை பகவதியின் குருதிபூஜையும் அவ்வப்போது நடந்து வருகிறது. மகாசிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, சதுர்த்தி என அனைத்து விஷேச கால பூஜைகளும் சிறப் பாக நடைபெற்று வருகிறது.

இந்த ஆலயம் காலை 5 மணிமுதல் 11 மணிவரையில் 5 மணி முதல் 8 மணிவரையலும் திறந்திருக்கும்.

கோவிலுக்கு செல்லும் வழி, 111, திருவள்ளுர் ரெட் ஹில்ஸ் மெயின் ரோடு, கீழானூர் கிராமம், ராகவா மருத்துவ மனை அருகில், தொடர்பு எண் 9786223577, 9940482616


LIC
STAR
NEW INDIA ASSURANCE
दि न्यू इण्डिया एश्योरन्स कंपनी लिमिटेड
The New India Assurance Co. Ltd

மாதாந்திர பென்ஷன் திட்டம்
18 வயது முதல் ஆயுள் முழுக்க பென்ஷன்
இயற்கை மற்றும் விபத்து இறப்பு பலன்
குழந்தைகள் கல்வி திட்டம்
மணி பேக் திட்டம்

மகப்பேறு மற்றும் கர்பப்பை செலவுகள்
புதிதாக பிறந்த குழந்தைக்கான செலவு
கண்புரை சிகிச்சை, இருதயம், நீரிழிவு,
கிட்னி கல், பைல்ஸ், குடல் இறக்கம்,
ஆயுஷ், ஆஸ்துமா மற்றும் அனைத்தும்

டூவீலர் மற்றும் கார்களுக்கான காப்பீடு
வீட்டு பொருட்களுக்கான காப்பீடு
தொழிலாளர்களுக்கான காப்பீடு
எல்லா வாகனங்களுக்கும் காப்பீடு
ஏற்றுமதி இறக்குமதி காப்பீடு

veluinsuranceservices@gmail.com
90031 99676 / 74486 65860

# 108 சிவன் கோயில்கள் தரிசன பலன்கள்

1. திருகுடந்தை ஊழ்வினை பாவம் விலக
2. திருச்சிராப்பள்ளி வினை அகல
3. திருநள்ளாறு கஷ்டங்கள் விலக
4. திருவிடைமருதூர் மனநோய் விலக
5. திருவாவடுதுறை ஞானம் பெற
6. திருவாஞ்சியம் தீரா துயர் நீங்க
7. திருமறைக்காடு கல்வி மேன்மை உண்டாக
8. திருத்தில்லை முக்தி வேண்ட
9. திருநாவலூர் மரண பயம் விலக
10. திருவாரூர் குல சாபம் விலக
11. திருநாகை (நாகப்பட்டினம் ) சர்ப்ப தோஷம் விலக
12. திருக்காஞ்சி ( காஞ்சிபுரம் ) முக்தி வேண்ட
13. திருவண்ணாமலை நினைத்த காரியம் நடக்க
14. திருநெல்லிக்கா முன்வினை விலக
15. திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவில் மணவாழ்க்கை சிறப்புடைய
16. திருகருக்காவூர் கர்ப்ப சிதைவு தோஷம் விலக
17. திரு வைத்தீஸ்வரன் கோவில் நோய் விலக
18. திருகோடிக்கரை பிரம்ம தோஷம் விலக
19. திருக்களம்பூர் சுபிட்சம் ஏற்பட
20. திருக்குடவாயில் (குடவாசல்) இறந்தவர் ஆன்மா சாந்தி அடைய
21. திருசிக்கல் ( சிக்கல் ) துணிவு கிடைக்க
22. திருச்செங்காட்டங்குடி கோர்ட் வம்பு, வழக்கு உள்ளவர்கள் தோஷம் விலக
23. திருக்கண்டீச்சுரம் நோய் விலக , தீராத புண் ஆற
24. திருக்கருக்குடி (மருதாநல்லூர்) குடும்ப கவலை விலக
25. திருக்கருவேலி (கருவேலி) குழந்தை பாக்கியம் பெற , வறுமை நீங்க
26. திருவழுந்தூர் ( தேரெழுந்தூர் ) முன் ஜென்ம பாவம் விலக
27. திருச்சத்திமுற்றம் மண வாழ்க்கை கிடைக்க
28. திருப்பராய்துறை (திருச்சி) கர்வத்தால் வீணானவர்கள் சுகம் பெற
29. திருநெடுங்களம் (திருச்சி) தீரா துயரம் தீர, இடர் களைய
30. திருவெறும்பூர் (திருச்சி) அதிகாரத்தால் வீழ்ந்தவர்கள் சுகம் பெற
31. திருப்பைஞ்ஞீலி ( திருச்சி ) யம பயம் விலக
32. திருவையாறு அக்னி தோஷம் உள்ளவர்கள் தோஷம் விலக
33. திருவைகாவூர் வில்வ அர்ச்சனை செய்து பாவத்தை போக்க
34. திருக்கஞ்சனூர் திருமண தோஷம் விலக
35. திருமங்கலக்குடி (சூரியனார் கோவில்) குழந்தை பாக்கியம் பெற
36. திருமணஞ்சேரி திருமண தோஷம் விலக
37. திருமுல்லைவாயில் சந்திர திசை நடப்பவர்கள் சந்திர தோஷம் விலக
38. திருவெண்காடு ஊழ்வினை தோஷம் உள்ளவர்கள் கல்வி மேன்மை
39. திருநெல்வேலி பிராமண குற்றம் விலக
40. திருக்குற்றாலம் குற்றாலநாதர் கோவில் முக்தி வேண்ட
41. திருவாலவாய் ( மதுரை ) தென்திசையில் குடியிருப்பவர்கள் நட்சத்திர தோஷம் உள்ளவர்கள் வழிபட
42. திருப்பரங்குன்றம் (மதுரை) வாழ வழி தெரியாது தவிப்பவர்கள் வழிபட
43.. திருவாடானை ஆதிரத்தினேசுவரர் கோவில் தீரா பாவம் விலக
44. திருமுருகன் பூண்டி திருமுருகநாத சுவாமி கோவில் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் தோஷம் விலக
45. திருப்பாதிரிப்புலியூர் ( புட்லூர் ) தாயை விட்டு பிரிந்து இருக்கும் குழந்தை தோஷம் விலக
46. திருவக்கரை செய்வினை தோஷம் விலக
47. திருவேற்காடு வாணிப பாவம் விலக
48. திருமயிலாப்பூர் மூன்று தலைமுறை தோஷம் விலக
49. திருஅரசிலி ( ஒழுந்தியாம்பட்டு ) காமத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தோஷம் விலக
50. திருவாலங்காடு வீண் வம்பில் மாட்டிக் கொண்டவர்கள் தோஷம் விலக
51. திருவேட்டிபுரம் ( செய்யாறு ) ஞானம் கிடைக்க



மாதம் இரண்டு முறை வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)"த்தை
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்
181 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன
09.02.2025
சிறப்பிதழ்





ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

52. திருப்பனங்காடு பந்த பாசத்தில் இருந்து விலக
53. திருவூறால் ( தக்கோலம் ) உயிர்வதை செய்த பாவம் விலக
54. திருப்பாச்சூர் குடும்ப கவலைகள் நீங்க
55. திருவெண்ணைநல்லூர் பித்ரு தோஷம் விலக
56. திருவதிகை நல் மனைவி அமைய
57. திருவாண்டார் கோவில் முக்தி வேண்ட
58. திருமுது குன்றம் ( விருத்தாசலம் ) தீரா பாவம் விலக
59. திருக்கருவூர் ( கரூர் ) பசுவதை செய்வதன் வழிபட
60. திருப்பாண்டிக் (கொடுமுடி) பித்ரு தோஷம், பிரேத சாபம் விலக
61. திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) மறுபிறவி வேண்டாதவர்கள் வழிபட
62. திருகோகர்ணம் ( கர்நாடகம் ) தேவ தோஷம் விலக
63. திருப்புகழூர் பெரியோரை அவமதித்த குற்றம் நீங்க
64. திருத்தோணிபுரம் ( சீர்காழி ) குல சாபம் நீங்க
65. திருவைத்தீஸ்வரன் கோவில் பிணிகள் விலக, அங்கார தோஷம் விலக
66. திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு) குரு துரோகம்
67. திருப்பனந்தாள் பிறன்மனை தோஷம் விலக
68. திருப்புறம்பயம் மரண பயம் விலக
69. திருநெய்த்தானம் மோட்ஷம் வேண்ட
70. திருவானைக்காவல் கோவில் கர்மவினை அகல
71. திருவேதிக்குடி தான் எனும் அகம்பாவத்தால் சீரழிந்தவர்கள் தோஷம் விலக
72. திருவலஞ்சுழி வறுமை அகல
73. திருநாகேஸ்வரம் ஸர்ப்ப ஸாபம் விலக
74. திருநாகேஸ்வர சுவாமி ( கும்பகோணம் ) நவகிரஹ தோஷம் விலக
75. திருநல்லம் (கோனேரிராஜபுரம்) வேதத்தை பரிகசித்து அவலத்துக்கு உள்ளானவர்கள் தோஷம் விலக
76. திருத்தெளிச்சேரி ( காரைக்கால் ) சூரிய தோஷம் உள்ளவர்கள் குறை தீர
77. திருசெம்பெரின்பள்ளி வீரபத்ரன் குல வம்சத்தினர் வணங்க
78. திருத்தலச்சங்காடு ( தலைச்செங்காடு ) அடிமையாட்கள் சாபம் பெற்றவர்கள் தோஷம் விலக
79. திருவன்னியூர் (அன்னூர்) சோமாஸ்கந்தரை குலதெய்வமாக கொண்டவர்கள் வழிபட
80. திருநன்னலம் (நன்னிலம்) ஞானம் வேண்ட
81. திருராமனாதீச்சுரம் (திருக்கண்ணாபுரம்) சந்தேகப் பார்வைக்குட்பட்ட பெண்கள் தோஷம் விலக



82. திருமருகல் கணவன் மனைவி அன்புடன் வாழ
83. திருச்சிக்கல் பங்காளி பகை உள்ளவர்கள் வழிபட
84. திருச்சேறை இல்லறம் மேலும் சிறக்க
85. திருக்கோளிலி (திருக்குவளை) நவகோள்களால் பாதிக்கப்பட்டவர்கள் வழிபட
86. திருவாய்மூர் செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் தோஷம் விலக
87. திருநெல்லிக்கா கல்வி மேன்மை அடைய
88. திருவெண்டுறை (வண்டுறை) வறுமையிலிருந்து விலக
89. திருக்கடிக்குளம் (கற்பகநாதர்குலம்) வினைகள் விலக
90. திருஆலங்குடி புத்திர தோஷம் விலக, செல்வம் சேர்க்கை பெற
91. கொட்டாரம் அமைதி பெற
92. திட்டை சந்திர தோஷம் விலக
93. பசுபதி கோவில் இராகு தோஷம் உள்ளவர்கள் வழிபட
94. கொட்டையூர் செய்த பாவங்கள் வேயொரு வீழ
95. ஓமாம்புலியூர் சனி தோஷம் விலக
96. தருமபுரம் சிவனடியாரை அவமதித்த குற்றம் விலக
97. மயிலாடுதுறை அனைத்து பாவங்களும் விட்டோட
98. உத்தரகோச மங்கை கர்மவினைகள் அல்ல
99. இராமேஸ்வரம் பித்ரு தோஷம் விலக
100. காளையர்கோவில் பிறவி பயன் கிடைக்க
101. பெண்ணாடம் ஊழ்வினை தோஷம் அகல
102. இராஜேந்திரப்பட்டினம் கர்மவினை அகல
103. அவினாசியப்பர் ஏழு தலைமுறை பாவங்கள் விலக
104. குரங்கினில் முட்டம் நினைத்த காரியம் நடக்க
105. பவானி பித்ரு தோஷம் போக்க
106. ஆச்சான்புரம் மண வாழ்க்கை சிறக்க
107. ஆடுதுறை திருஷ்டி தோஷம் விலக
108. சங்கரன்கோவில் ஸர்ப்ப தோஷம் விலக







aanmeegamalar.com

akkarai Responsible Snacking
LET'S THINNAI Relax & Recharge
The ICECREAM VAN Homely IceCream
ONDRAHA Wholesome Selling
CHOCOLATE Cafe

Thattankulam | Madurai | Keezhadi
Madurai

Shop Select Product of 'akkarai' Range
at www.indianfoods.in | www.akkarai.co.in
(Delivery Across India)




10.02.2025 பரமக்குடி அருள்மிகு முத்தாலபரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தரும் அனைவரையும் அன்புடன் அழைக்கும்



நம்ம ஊரு ! நம்ம ஆர்ச் ! நம்ம ஆரஞ்ச் !

ஆரஞ்ச் சூப்பர் மார்ட் A/C

7/331, நேதாஜி ரோடு, காந்தி சிலை ஆர்ச் அருகில், பரமக்குடி - 623707.
4/323, காந்திஜி ரோடு, கூட்டுறவு பால்பண்ணை எதிரில், பரமக்குடி - 623707.

9566663133, 9952293016,9994934265,8870070127

எங்களிடம் மளிகை, அரிசி, கவரிங், பேன்சி, பிளாஸ்டிக், சில்வர் பொருட்கள்
இவை அனைத்தும் மிகக் குறைந்த விலையில் ஆனந்தமாய் வாங்க! ஆரஞ்ச்க்கு வாங்க !!




# அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன்

## திருக்கோவில் கும்பாபிஷேகம்

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள தென் பாண்டி நாட்டில் திலகம் போல் விளங்குவதும் புண்ணிய நதியாம் வைகை ஆற்றில் வளமிக்க திருநாவுக்கரசர் சுவாமிகள் பாடல் பெற்ற பெருமையும் கொண்டு அருள்மிகு ஸ்ரீ சிருங்கேரி சுவாமிகள், அருள்மிகு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள், தமிழகத்தில் பெருமை மிக்க மடாதிபதிகள், சமயாச்சாரியார்கள் ஆகியோர்களால் வழிபாடு செய்து பெருமை பெற்ற தென்பரம்பையம்பதியாம் பரமக்குடியில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக திருப்பணிகள் ஆயிரவைசியர்களால் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு, வரும் 10-ந்தேதி திங்கட்கிழமை காலை 9.10 மணி முதல் 9.15 மணிக்குள் மஹாகும்பாபிஷேகம் அதை தொடர்ந்து மஹா அபிஷேகம் நடைபெறுகிறது.

கும்பாபிஷேகத்தைமுன்னிட்டு ராஜ கோபுரம், கொடிமரம் விமான கோபுரம் மற்றும் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி, ஸ்ரீ திரௌபதி, ஸ்ரீ மார்த்தாண்டி, ஸ்ரீ போத்திராஜா , ஸ்ரீ கருப்பர், அருள்மிகு ஸ்ரீ மாருதி, ஸ்ரீ பைரவர் உள்ளிட்ட பரிவார சன்னதிகள்

புதுப்பிக்கப்பட்டு கலைநயத்துடன் வர்ண வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

புதிதாக வெள்ளி ரதம் மற்றும்

aanmeegamalar.com







அம்பாள் எழுந்தருளும் வாகனங்களும் புதுபிக்கப்பட்டுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த 4 ந்தேதி இங்கு உள்ள மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் முருகர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் வழிபாடு செய்து நகர் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெற்று 5 ந்தேதி காலை மஹா கணபதி ஹோமத்துடன் முதல் கால யாக சாலை பூஜைகள் தொடங்கியது.

அதை தொடர்ந்து ஐந்தாம் கால யாகசாலை பூஜை 9ந்தேதியும் 10ந்தேதி திங்கட்கிழமை காலை ஆறாம் கால யாகசாலை பூஜை தொடங்கி மூலஸ்தான விமான கோபுரம், ராஜகோபுரம், மற்றும் பரிவார விமான கோபுரங்கள் சம காலத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அதைதொடர்ந்து மூலஸ்தானம் பரிவார தேவதைகளுக்கு மஹா அபிஷேகம் ஜெபஹோமம் , பூர்ணாஹூதி தீபாராதனை நடைபெறுகிறது. இரவு அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன் புதிய நூதன புஷ்ப பல்லக்கில் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அலங்காரத்துடன் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பரமக்குடி ஆயிரவைசிய மேல்நிலை பள்ளி கலையரங்கத்தில் சிறப்பு அன்னதானப் பெருவிழா நடைபெறுகிறது. மஹா கும்பாபிஷேகம் விழா ஏற்பாடுகளை பரமக்குடி ஆயிர வைசிய சபையினர் செய்து உள்ளனர்.


ஸ்ரீ திருமலை தண்டபாணி டிரேடர்ஸ்

HOME UPS, BATTERY




Ph:9688991757

செல்வ கணபதி (CCTV) சிஸ்டம்




PH:9952569372

பரமக்குடி (காந்தி சிலை அருகில்)

OUR SALES AND SERVICES AVAILABLE IN

மதுரை-இராமநாதபுரம்-இளையான்குடி



# மகா சிவராத்திரி தோன்றிய தலம்

மகாசிவராத்திரி தோன்றியது திருவண்ணா மலை தலத்தில் தான் என்பது பலருக்கும் தெரியாத ரகசியமாக உள்ளது. இந்த நாளில் தான் கோடி சூரிய பிரகாசத்துடன் சிவபெருமான் லிங்க வடிவில் திருவண்ணாமலையில் தோன்றி னார் என்று புராணங்களில் குறிப்பிடப் பட்டுள் ளது.

இதன் பின்னணியில் ஒரு புராண நிகழ்வு சொல்லப்படுகிறது. விஷ்ணுவுக்கும் பிரம்மா வுக்கும் ஒரு தடவை தம்மில் யார் பெரியவர் என்ற சண்டை ஏற்பட்டது. அவர்களது சண்டை யைத் தீர்த்து வைக்குமாறு தேவர்கள் அனைவ ரும் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

அதை ஏற்று சிவபெருமான் மிகப்பெரிய நெருப்புப் பிழம்பாக விஷ்ணு, பிரம்மா இருவர் முன்பும் தோன்றினார் அந்த நெரு ப்புப் பிழம்பு மண்ணுக்கும், விண்ணுக்கும் பரவி மிகப் பிரமாண்டமாக காட்சி அளித்தது.

அந்த நெருப்புப் பிழம்பு விஷ்ணு, பிரம்மா இருவரிடமும் "எனது அடிமுடியை யார் முதலில் தொட்டு வருகிறீர்களோ, அவரே இந்த உலகின் பெரியவர் ஆவார்" என்றது. உடனே விஷ்ணு வராக (பன்றி) உருவம் எடுத்து அந்த நெருப்பு பிழம்பின் அடியை காண்பதற்காக பூமியை துளைத்துச் சென்றார்.

பிரம்மனோ அன்னப் பறவையாக மாறி, நெருப்புப் பிழம்பின் முடியை கண்டு வருகிறேன் என்று உயரே பறந்து சென்றார். பல ஆண்டுகள், யுகங்களாக முயன்றும் விஷ்ணு, பிரம்மா இரு வராலும் அந்த நெருப்புப் பிழம்பின் அடி, முடியை காண இயலவில்லை.

இது ஈசனின் செயலாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்த விஷ்ணு, தனது முயற் சியை கைவிட்டு திரும்பி வந்தார். அவரிட ம் இருந்த ஆணவம் காணாமல் போய் விட்டது.

ஆனால் பிரம்மாவிடம் இருந்த அகந்தை மட்டும் நீங்கவில்லை. உயர பறக்க முடியாமல் சோர்வடைந்து திரும்பிக் கொண்டிருந்த பிரம்மா, ஒரு தாழம்பூவை பார்த்தார். அந்த தாழம்பூ ஈசனின் முடியில் இருந்து விழுந்து பல நூறு யுகங்களாக கீழே வந்து கொண்டிரு ப்பதை அறிந்தார்.

நெருப்புப் பிழம்பின் முடியை தான் கண்ட தாக பொய் சொல்ல வேண்டும் என்று அந்த தாழம்பூவிடம் பிரம்மா கேட்டுக் கொ ண்டார். தாழம்பூவும் அதற்கு சம்மதித்தது.

தரை இறங்கியதும் அந்த தாழம்பூ பொய் சாட்சி சொன்னது. அவ்வளவுதான். நெருப் புப் பிழம்பாக இருந்த சிவபெருமானுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அந்த நெருப்புப் பிழம்பில் இருந்து சிவபெருமா ன் வெடித்துக் கொண்டு லிங்க வடிவில் வெளியில் வந்தார்.

விஷ்ணுவுக்கும், தேவர்களுக்கும் கேட்ட வரங்களை எல்லாம் கொடுத்த சிவபெரு மான், பொய் சொன்னதற்காக பிரம்மாவுக்கு, பூமியில் கோவில் இல்லை என்றும், தாழம்பூவை பூஜைக்கு தகுதியற்ற மலரா வாய் என்றும் சாபமிட்டார்.

இந்த நிகழ்ச்சி நடந்தது திருவண்ணாம லையில்

என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் உலகில் திருவண்ணாமலையில் தான் முதன் முதலில் அக்னி தோன்றியது என்கிறார்கள். இந்த அக்னியில் இருந்து தான் சூரியன், சந்தி ரன் பிரகாசங்கள் மற்றும் தீப ஒளிகள் தோன் றின என்று புராணங்களில் எழுதப்பட்டுள்ளது.

இந்த அக்னியில் இருந்து வெளியில் வந்த சிவபெருமான் “லிங்கோத்பவர்” வடிவில் காட்சிக் கொடுத்தார். இதனால் திருவண்ணா மலையில்தான் முதன் முதலில் லிங்க வழி பாடு தோன்றியது என்பது உறுதியாகிறது. மாசி மாத சிவரா த்திரியன்று இந்த நிகழ்வு நடந்ததால், அது மகா சிவராத்திரி என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. ஆக, மகா சிவராத்திரி தோன்றிய தலம் திருவண்ணாமலையே..

திருவண்ணாமலையில் இருந்துதான் லிங்கோத்பவர் வழிபாடும், மகா சிவராத்திரி கொண்டாட்டமும் மற்ற தலங் களுக்கு பரவியது.

## சிவராத்திரி பற்றி அரிய தகவல்கள்

- சிவராத்திரி அன்றுதான் அன்னைஉமாதேவி சிவபெருமானை பூஜித்து வழிபட்டாள். அதனால், நாமும் அந்த தினத்தில் பூஜை செய்து சிவபெருமானை வழிபடுவது சிறந்த பலனைத்தரும்.
- சிவராத்திரி என்ற சொல் சிவனுடைய ராத்திரி, சிவமான ராத்திரி, சிவனுக்கு இன்பமான ராத்திரி என்று பல வகைப் பொருளை தருகிறது.
- சிவராத்திரி 4 ஜாமங்களிலும் ஒருவர் செய்யும் பூஜை, அவரை முக்தி பாதைக்கு அழைத்து செல்ல உதவும்.
- சூரியன், முருகன், மன்மதன், இந்திரன், எமன், சந்திரன், குபேரன், அக்னி பகவான் ஆகியோர் முறைப்படி சிவராத்திரி விரதம் இருந்து பேறு பெற் றுள்ளனர்.
- சிவராத்திரியன்று ஆலயங்களுக்கு செல்ல முடியாதவர்கள் வீட்டில் இருந்தபடியே சிவபெருமா னுக்கு மனதில் அபிஷேகம் செய்து சிவனை வழி படலாம்.
- எறும்பு, நாரை, புலி, சிலந்தி, யானை, எலி போன்ற வை கூட சிவபூஜையால் மோட்சம் அடைந்துள்ளன.
- சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் தருபவர் என்று பொருள். எனவே எந்த அளவுக்கு ஒருவர் சிவ, சிவ.... என்று உச்சரிக்கிறாரோ, அந்த அளவுக்கு அவர் நன்மை பெறுவார்.
- சிவராத்திரியன்று திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமியை வழிபட்டால் மறு பிறவி கிடையாது.
- சிவராத்திரி தினத்தன்று, தியாகராஜர் என்ற பெயரில் ஈசன் வீற்றிருக்கும தலங்களில் தரிசனம் செய்தால் பாவங் களில் இருந்து விடுபடலாம்.
- கஞ்சனூரில் ஒரே பிரகாரத்தில் அடுத் தடுத்து 2 தெட்சிணாமூர்த்திகள் உள்ளனர். சிவராத்திரியன்று இவர்களை வழிபட்டால், சிவஞானம் எளிதில் கிடைக்கும் என்பது நம்பிக்கை.
- சிவபெருமான் லிங்கமாக உருவெடுத்த தினமே சிவராத்திரி என்று ஒரு கருத்து உண்டு.
- திருவதிகை தலத்தில் உள்ள வீராட்டா னேஸ்வரரை சிவராத்திரி தினத்தன்று வழிபட்டால் ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்றும் நீங்கும்.



- பண்டரிபுரத்தில் உள்ள பாண்டு ரங்கன் சங்கர நாராயண வடிவம் என்பார்கள். பாண்டுரங்கன் தலையில் கிரீடத்துக்கு பதில் பாண லிங்கம் இடம் பெற்றுள்ளது. சிவராத்திரி தினத்தன்று பாண்டுரங்கனுக்கு நிவேதனம் செய்வதில்லை. அவரும் அன்று சிவராத்திரி விரதம் இருப்பதாக சொல்கிறார்கள்.
- மகா சிவராத்திரி தினத்தன்று அபிஷேகத் துக்கு உரிய பொருட்களை வாங்கி ஆலயத்துக்கு கொடுப்பவர்கள் பரமானந்த நிலையை அடைவார்கள் என்பது ஐதீகம்.
- ஊத்துக் கோட்டை அருகில் உள்ள சுருட்டப்பள்ளி யில் மட்டுமே சயன கோலத்தில் ஈசன் உள்ளார். சிவராத்திரி தினத்தன்று அங்கு ஈசனை வெள்ளி அங்கியில் தரிசனம் செய்யலாம்.
- சிவராத்திரி தினத்தன்று சிவபுராணம், தேவாரம் மற்றும் திருமுறைகள் படிப்பது மிகவும் நல்லது.
- திருவைகாவூர் ஈசனை சிவராத்திரி தினத்தன்று வழிபட்டால், மரண பயம் நீங்கும்.
- கருட புராணம், கந்தபுராணம், அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல் களில் சிவராத்திரி மகிமை பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது.
- சிவராத்திரி தினத்தன்று மாலை சூரியன் மறைந்ததில் இருந்து மறுநாள் காலை சூரியன் உதயமாகும் வரை சிவ பூஜை செய்பவர்களுக்கு எல்லா பாக்கியங்களும் கிடைக்கும்.
- ஒரு வருடம் சிவராத்திரி விரதம் இருப்பது என்பது நூறு அசுவமேத யாகம் செய்த பலனும், பல தடவை கங்கா ஸ்நானம் செய்த பலனும் தரவல்லது.
- சிவராத்திரியன்று கலச பூஜையுடன் லிங்கமும் வைத்து வழிபடுவது கூடுதல் பலன்களைத் தரும்.

# மனதில் அமைதியும், உள்ளத்தில் உவகையும், உடல் ஆரோக்கியமும் தரும்

# ஆறுபடை முருகன்

முருகப் பெருமான் வரலாறு பற்றி முதன் முதலாகத் தமிழில் படைக்கப் பெற்ற இலக்கியம், 'திருமுருகாற்றுப் படை' ஆகும். பெரும் புலவர் நக்கீரர், முருகன் அருள் பெற்றுப் படைத்த சங்க இலக்கியமான திருமுருகாற்றுப் படை, முருகப் பெருமான் கோயில் கொண்டுள்ள ஆறு படை வீடுகளைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

முருகன் அருள் பெற்ற புலவர், மற்றோர் புலவரை முருகனிடம் ஆற்றுப் படுத்துவதே திருமுருகாற்றுப் படை ஆகும். இதனால், திருமுருகாற்றுப் படைக்குப் 'புலவர் ஆற்றுப் படை' என்ற வேறு பெயரும் உண்டு. 'இயற்கை அழகே முருகன்' என்பது நக்கீரரின் அழுத்தமான எண்ணமாகும். அதனால் முருகப் பெருமானின் அழகைக் 'கை புனைந்து இயற்றாக் கவின் பெரு வனப்பு' என்று கொண்டாடுவார்.

பழந்தமிழ் இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம், முருகப் பெருமானை 'சேயோன்' என்ற பெயரால் அழைக்கிறது. 'சேயோன் மேய மைவரை உலகம்' என்பது தொல்காப்பிய சூத்திரத்தில் காணப்பெறும் தொடராகும்.

'சேயோன்' என்பதற்கு 'இளையவன்' என்ற பொருளும் உண்டு. இளமை எங்குள்ளதோ அங்கே அழகும் கொஞ்சி விளையாடும். 'மைவரை உலகம்' என்றால் 'மழை மேகம் சூழ்ந்த மலைப் பகுதி' என்பது பொருள்.

மலையும் மலை சார்ந்த பகுதியையும் குறிஞ்சித் திணை என்று கூறுகிறது தொல்காப்பியம். ஆம்! குன்றிருக்கும் இடம் எல்லாம் குமரன் நின்று அருள் பாலிப்பான்.'ஆற்றுப் படை' என்பதே 'ஆறுபடை' எனத் திரிந்துவிட்டது என்றொரு கருத்துண்டு.

முருகனின் அறுபடை வீடுகளுக்கும் சென்று வந்தால் மனதில் அமைதியும், உள்ளத்தில் உவகையும், உடல் ஆரோக்கியமும் கிடைப்பது நிச்சயம்.

அந்த வகையில் ஆறுபடைவீடுகளைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

## முதல்படை வீடு

ஆறுபடை வீடுகளில் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் முருகன், சூரபத்மனை போரில் வென்ற பின்னர் இந்திரன் தன் மகள் . தெய்வானையை முகனுக்கு மணமுடித்து வைக்கிறார். இங்கு தெய்வானையுடன் மணக்கோலத்தில் காட்சி தருகிறார்.



இங்கு மலைவடிவில் சிவபெருமான் அருள் புரிகிறார். அமர்ந்த கோலத்தில் முருகன் காட்சியளிப்பது சிறப்பாகும்.

## இரண்டாம் படைவீடு

முருகனின் இரண்டாம் படைவீடான திருச்செந்தூர் கடலோரத்தில் அமைந்துள்ளதால் திருச்சீலைவாய் என்றும், ஜயந்திபுரம் என்றும் பெயருண்டு.

இங்கு முருகப் பெருமான் சூரபத்மனை அழித்ததாக கந்த புராணம் கூறுகிறது. குரு ஸ்தலமாகவும் விளங்குகிறது.

## மூன்றாம் படைவீடு

முருகனின் மூன்றா படைவீடான பழநி, சித்தர்கள்








வாழ்ந்த புண்ணிய பூமியாகும். பழநி முருகர் சிலை போகர் சித்தரால் நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்டது.

ஞானப் பழம் அடைய வேண்டிய போட்டியில், தமையன் பிள்ளையாருடன் தோற்ற கோபத்தில் பழநியில் தண்டாயுத பாணியாக காட்சி தருகிறார்.

இவரின் தோற்றம் உலக உண்மைகளை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

இங்கு அபிஷேகம் செய்யப்பட்ட பஞ்சாமிர்தம், பால், தீர்த்தம் பிரசாதமாக சாப்பிட்டால் சகல நோய்களும் தீரும்.

## நான்காம் படைவீடு

தன்னைவிட தன் பிள்ளைகள் அறிவுடையவர் களாக இருப்பது தந்தைக்கு மகிழ்ச்சியை தரும். அது மனிதர் களுக்கு மட்டுமல்ல, இறைவனுக்கும் அப்படி தான் போலும்.

தன் பிள்ளையின் வாயால் பிரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்க பிள்ளையை குருவாக ஏற்று, தான் சீடனாக அமர்ந்து குருவின் விளக்கத்தை கெட்ட இடம் சுவாமி மலை. அதனால் இந்த சுவாமி மலை முருகனுக்கு 'சிவகுரு நாதன்' என்ற பெயரால் வணங்கப்பட்டு வருகின்றார்.

## ஐந்தாவது படைவீடு

திருச்செந்தூரில் சூரனை வதம் செய்த முருகன் திருத் தணிக்கு சென்று தன் கோபத்தை தணித்துக் கொண்டு சாந்தமானதால், தணிகை என்று இந்த ஊருக்கு பெயர் வந்தது. மேலும் வேடர் குலத்தில் பிறந்த வள்ளியை, அண்ணன் கணேசனின் உதவியுடன் காதல் திருமணம் செய்து கொண்ட இடம் திருத்தணி ஆகும்.

இந்த கோயிலை அருணகிரிநாதர், முத்துச்சாமி தீட்சிதர் உள்ளிட்டோரால் பாடால் பெற்ற தலம்.

## ஆறாவது படைவீடு

அறுபடை வீடுகளில் கடைசியாக வரும் படைவீடு அழகர் மலை மீது இருக்கக் கூடிய சோலைமலையாகும். இங்கு ஔவை பாட்டியிடம் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா என்று கேட்ட முருகனின் ஞானத்தைப் பார்த்து நீ சாதாரண மானிடராக இருக்க முடியாது என தெரிந்து கொண்டார். இந்த திருத்தலத்தில் உலக வாழ்கைக்கு தேவை கல்வி அறிவு மட்டும் போதாது இறையருள் என்ற மெய் அறிவை உணர வேண்டும் என்பதை தன் திருவிளையாடலால் உணர்த்திய இடம்.



பழனி தைப்பூச விழாவிற்கு
வருகை தரும் பக்தர்களை
வரவேற்கிறோம்...

இறைபணியில் P. முருகேசன் உரிமையாளர்
சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்
186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588


aanmeegamalar.com



# ஆதிசேசனின் ஏழு தலைகளை குறிக்கும் திருப்பதி

உலகிலேயே பழைமையும், பெருமையும் வாய்ந்த பாறை மலைகளில் இரண்டாம் இடம் வகிக்கும் மலைகள் திருமலை மலைகள் தான். திருப்பதியின் பழைய பெயரான திருவேங்கடத்தை பொ.ஊ.மு. 400-100 இல் எழுதப்பட்ட தமிழ் சங்க இலக்கியங்களான சிலப்பதிகாரமும், சாத்தனா ரின் மணிமேகலையும் குறிப்பிட்டுள்ளன. இந்த மலைகளை பண்டைய தமிழகத்தின் வடபுறத்து எல்லையாக சிலப்பதி காரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வெங்கடேஸ்வரா ஆலயம் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்பது தெரியவில்லை என்றாலும் இது பல பேரரசுகளால் பராமரிக்கப்பட்டு வந்திருக்கிறது. பல்லவர், சோழர், பாண்டியர், சாளுக்கியர், விசயநகர மன்னர்களால், இந்த கோவில் பராமரிக்கப்பட்டு வந்திருக்கிறது. இங்கே உள்ள கல்வெட்டுகள் பெரும்பாலும் தமிழ்க் கல்வெட்டு களாகும்.

திருப்பதி என்ற சொல் திரு+பதி என்று பிரிக்கப்படுகிறது. வடமொழி சொல்லான பதி என்பதற்கு கணவன் (தலைவன்) என்று பொருளுண்டு, தமிழ் சொல்லான திரு என்பதற்கு புண்ணியம், தெய்வத்தன்மைவாய்ந்த, மேன்மைமிக்க என பல பொருள்கள் உண்டு. திருப்படி என்பதே மருவி திருப்பதி ஆகியுள்ளதாகவும் கருதப்படுகிறது. திருமலை ஏழு மலைகள் என்றும் அழைக்கப்படுகிறது. இது தெலுங்கில் ஏடுகொண்டலு என்றும் தமிழில் ஏழுமலை என்றும் அழைக்கப்படுகிறது. ஏழு சிகரங்களைக் கொண்ட மலைகளில் திருமலை உள்ளது. இது ஆதிசேசனின் ஏழு தலைகளை குறித்து வருவதால் இந்த மலைக்கு சேசாசலம் என்று பெயர் உள்ளது. சேசாத்திரி, நீலாத்திரி, கருடாத்திரி, அஞ்சனாத்திரி, வ்ரிசபத்ரி, நாராயணாத்ரி, வேங்கடாத்ரி ஆகிய ஏழும் இந்த மலை சிகரங்களின் பெயர்களாகும். இங்கு கிடைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் பெரும்பாலும் தமிழ் கல்வெட்டுகளாகும் இது பண்டைய தமிழகத்தின் தொண்டை மண்டலத்தின் பகுதியாகும்

விசய நகர பேரரசின் மன்னரான ஸ்ரீ கிருஷ்ண தேவ ராயர், இந்த கோவிலுக்காக தங்கமும் மற்ற விலை உயர்ந்த ஆபரணங்களையும் நன்கொடையாக தந்துள்ளார். இந்தக் கோவிலுடன் ஒட்டி நிறைய கோவில்களையும் கட்டியுள்ளார். திருப்பதியில் இருந்து சில கிலோமீட்டர்கள் தொலைவில் தென் மேற்கு புறம் தள்ளி இருக்கும் சந்திரகிரி என்னும் கிராமம் விஜயநகர சக்கரவர்த்தியின் இரண்டாம் தலைநகரமாக விளங்கியது.

வைணவம் பெரிதாக பின்பற்றப்பட்ட பொ.ஊ. ஐந்தாம் நூற்றாண்டில் திருப்பதி, ஆழ்வார்களால்(வைணவ முனிவர்கள்) கலியுக வைகுண்டம் என்று போற்றப்பட்டது. பக்தி இயக்கத்தைச் சேர்ந்த ஆழ்வார்கள் ஆன்மீக பூமியில், வெங்கடேஸ்வரர் மீது அவர்கள் இயற்றிய பாடல்களுக்காகவும், இலக்கியங்களுக்காகவும் பெயர் போனவர்கள். வைணவ சம்பிரதாயத்தில்திருவரங்கத்திற்கு அடுத்தபடியாக விளங்குவது திருப்பதி ஆலயம்.

பதினோராம் நூற்றாண்டில் இந்தக் கோவிலின் ஆச் சார அனுஷ்டானங்கள் இராமானுஜ ஆச்சார்யரால் முறையாக் கப்பட்டன.

மதுரை மீனாட்சியம்மன் கோவில், அரங்கநாதசுவாமி கோவில் ஆகியவை இசுலாமியர்களால் சூறையாடப்பட்ட போது தென்னிந்தியாவில் தப்பி இருந்த இடம் திருப்பதி மட்டும்தான். இந்த இசுலாமிய பிரவேசங்களின் பொழுது திருவரங்கத்தில் இருந்த திருவரங்கர் திரு



aanmeegamalar.com

உருவச் சிலை திருப்பதிக்கு கொண்டுவரப்பட்டு பராமரிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்த நிகழ்வை குறிப்பதற்காக கட்டப்பட்ட ரங்கநாத மண்டபம் இன்றும் திருப்பதியில் இருக்கிறது.

இசுலாமியர்களிடமிருந்து திருமலை கோயில் தப்பியதற்கு சுவாரசியமான வரலாறு ஒன்று சொல்லப்படுகிறது. அந்த முகலாயப்படையினர்மலையின் மேல் என்ன கோயில் இருக்கிறது என்று கேட்டபோது அவர்களின் நோக்கத்தையும் பழக்க வழக்கங்களையும் நன்கறிந்த உள்ளூர் மக்கள் பன்றிக் கடவுளின் கோயில் என்றனராம்.

மக்கள் குறிப்பிட்டது வராஹப் பெருமாளின் திருக்கோயிலை. இந்தப் பெருமாளை தரிசித்தப்பின்னர்தான் ஏழுமலையானை தரிசிக்கவேண்டும் என்கிற சம்பிரதாயம் இருக்கிறது.

பன்றிகளின் மீது முகலாயர்களுக்கு இருக்கும் வெறுப்பால் அவர்கள் திருமலைக்கு செல்லும்எண்ணத்தைக் கைவிட்டுவிட்டனர் என்று சொல்லப்படுகிறது. திருப்பதி முந்தைய தமிழகத்தில் ஒரு முக்கியமான பகுதியாகும். பிறகு 1950காலங்களில் தமிழ்மொழி மற்றும் தெலுங்குமொழி வாரியான மாநிலச்சண்டை நடந்தது.

வரலாற்று ஆதாரங்கள் பார்த்தால் திருப்பதி தமிழ் ஆதாரங்கள் அதிகம் ஆனால் ஒரு மாநிலத்திற்கான தேவை மொழி தான் அந்த வகையில் திருப்பதி நகரத்தில் மொழி கணக்கெடுப்பில் தமிழ்பேசும் மக்களை விட தெலுங்குபேசும் மக்கள் தான் அதிகம் என்று திருப்பதி, திருக்காளத்தி,திருமலை மற்றும் சித்தூர் ஆகிய இந்த நான்கு தமிழ்நில பகுதிகள் தெலுங்கு தேசமான ஆந்திர பிரதேசத்துடன் சேர்க்கப்பட்டது.

திருப்பதி பிரம்மோற்சவம் புகழ் பெற்ற கோவில் திருவிழாவாகும். பங்குனி மாதத்தில் வருகின்ற பௌர்ணமி கணக்கில் கொண்டு இந்த திருவிழா நடத்தப்படுகிறது. சில தொலைக்காட்சிகள் நேரடி ஒளிபரப்பும் செய்கின்றன.



திருமலைக் கோவிலில் தினமும் அதிகாலையில் 'ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம்' (திருப் பள்ளி எழுச்சி) ஒலி பரப்பினாலும், மார்கழி மாதத்தில் மட்டும் தமிழ் திருப்பல்லாண்டு மற்றும் திருப்பாவை பாசுரங்களை ஒலிபரப்புகிறார்கள்.

இங்கு பிரசாதமாக வழங்கப்படும் லட்டு உலகப் புகழ் பெற்றதாகும். இந்த பிரசாதமானது திருப்பதி திருமலை தேவஸ்தானத்தினரைத் தவிர வேறெவரும் தயாரித்து விற்கக் கூடாது என்பதற்கான புவிசார் குறியீடு காப்புரிமையை பெற்றதாகும். இந்த லட்டுக்கள் சர்க்கரை, கடலைப்பருப்பு, நெய், முந்திரி பருப்பு, உலர் திராட்சை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, ஏலக்காய் போன்ற பொருட்களால் பிரத்தியேகமான ஒரு முறையில் தயாரிக்கப்படுகிறது.1931 ஆம் ஆண்டு திருப்பதியில் லட்டுப் பிரசாதத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் கல்யாணம் ஐயங்கார் எனும் பெரியவர்.



வைகுண்ட ஏகாதசி, ராம நவமி, கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி மாத பிரம்மோற்சவம், மார்கழி உற்சவம் மிகவும் முக்கியமாக விழாவாகக் கருதப்படுகிறது. இந்த நேரத்தில் ஒரு வாரத்துக்குள் இலட்சக்கணக்கில் பக்தர்கள் குவிகின்றனர். ரதசப்தமி (மகா சுத்த சப்தமி) என்ற திருவிழா இங்குநடைபெறுகிறது. இந்தசமயத்தில் வெங்கடேஸ்வரரின் திருஉருவச் சிலை வீதி வீதியாக தேரில்எடுத்து செல்லப்படுகிறது. இங்கு கீழ்த் திருப்பதியில் கங்கம்மா ஜாத்ராஎன்னும் திருநாள் விசேஷமாக கொண்டாடப் படுகிறது. கங்கம்மாவுக்கு பொங்கல் மற்றும் விலங்கு பலிகளை பக்தர்கள் படைக்கின்றனர். கங்கம்மா, கோவிந்தக் கடவுளின் தமக்கையாக கருதப்படுகிறார்.


SREE JANAKI TOURS
DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS
DOMESTIC & INTERNATIONAL

SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
- KOLLUR, UDUPI TOUR
- KERALA TEMPLE TOUR
- SHIRIDI, MANTRALAYAM
- NAVAGRAHA TOUR
- KASI, GAYA, ALLAHABAD & PURI
- AHOBILAM & HILL STATION

ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
- THIRUVANNAMALAI GIRIVALAM
- SRIPURAM GOLDEN TEMPLE
- SURUTAPALLI PRADASHOM
- SAKTHI TOUR
- THENNANGUR
- KANCHIPURAM & BALAJI DARSHAN

NEW 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092 (OPP JAINS KENCES RETREAT)
PHONE: 9094279625 / 9444465924 e-mail: srijanaki.tours@gmail.com

# "கருமுதல் – சதாபி ஷேகம்" வரை பலன் தரும்

# கும்பகோணம் கோவில்கள்

கும்பகோணத்தில் எந்தெந்த கோயிலுக்குச் சென்றால் என்னென்ன பலன்கள் கிடைக்கும்.

கும்பகோணத்தை சுற்றினால் வாழ்க்கையில் அனைத்து செல்வங்களும் கிட்டும் என்பது ஐதீகம்.

கோவில் என்றாலே அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது கும்பகோணம் தான். தமிழகத்தில் அதிகப்படியான கோயில்களை கொண்ட ஒரு மாநகரம் என்றால் அது கும்பகோணம் தான்.

இங்கு பல்வேறு விதமான கோவில்கள் உள்ளன. அதிலும் நவக்கிரகங்கள் கொண்ட கோவில்கள் மிகவும் அதிகம்.

அதிகப்படியானோர் இந்த பகுதிக்கு தோஷங்களை நீக்க மற்றும் திருமண தடைக்கு இலக்கு வேண்டி வருகின்றனர்.

இதனால் தான் இது கோவில் நகரம் என்று அழைக்கப்படுகிறது. இந்நிலையில் எந்த கோவிலுக்கு சென்றால் என்ன பலன் கும்பகோணம் திருக்கோயில்கள் "கருமுதல் சதாபி ஷேகம்" வரை பலனடைய இந்த கோவில்களை மட்டும் வழிபட்டால் போதும்.

◎ கரு உருவாக (புத்திரபாக்கியம்) கருவளர்ச்சேரி.

◎ கரு பாதுகாத்து சுகப்பிரசவம் பெற திருக்கருக் காவூர்.

◎ நோயற்ற வாழ்வு பெறுவதற்கு வைத்தீஸ்வரன் கோவில்.

◎ ஞானம் பெற சுவாமிமலை.

◎ கல்வி மற்றும் கலைகள் வளர்ச்சிக்கு கூத்தனூர்.

◎ எடுத்த காரியம் வெற்றி மற்றும் மனதைரியம் கிடைக்க பட்டீஸ்வரம்.

◎ உயர் பதவியை அடைய கும்பகோணம் பிரம்மன்கோயில்.

◎ செல்வம் பெறுவதற்கு ஒப்பிலியப்பன் கோவில்.

◎ கடன் நிவர்த்தி பெற திருச்சேறை சரபரமேஸ்வரர்.

◎ இழந்த செல்வத்தை மீண்டும் பெற திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி.

◎ பெண்கள் ருது ஆவதற்கும், ருது பிரச்சினைகள் தீர கும்பகோணம் காசி விஸ்வநாதர் (நவ கன்னிகை).

◎ திருமணத்தடைகள் நீங்க திருமணஞ்சேரி.

◎ நல்ல கணவனை அடைய கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் மங்களாம்பிகை.

◎ மனைவி, கணவன் ஒற்றுமை பெற திருச்சத்திமுற்றம்

◎ குழந்தைபாக்கியத்திற்கு. இரட்டை லிங்கேஸ்வரர். சென்னியமங்கலம். திப்பிராஜபுரம்

◎ பில்லி சூனியம் செய்வினை நீக்க அய்யாவாடி ஸ்ரீ பிரத்தியங்கிர தேவி.

◎ கோர்ட்டு வழக்குகளில் நியாயம்வெற்றியடைய திருபுவனம் சரபேஸ்வரர்.

◎ பாவங்கள் அகல கும்பகோணம் மகாமகத் திருக்குளத்தில் நீராடல்.

◎ எம பயம் நீங்க ஸ்ரீ வாஞ்சியம்.

◎ நீண்ட ஆயுள் பெற திருக்கடையூர்.



aanmeegamalar.com

# தமிழகத்திலுள்ள இராமர் ஆலயங்கள்


1. இராமேஸ்வரம் கோதண்ட ராமர்
2. வடுவூர் கோதண்ட ராமர்
3. மதுராந்தகம் ஏரிகாத்த ராமர்
4. கும்பகோணம் ராமசாமி (பட்டாபிஷேகராமர்)
5. திருப்புல்லாணி தர்பசயன ராமர்
6. திருவள்ளூர் வீரராகவப் பெருமாள்
7. தில்லைவிளாகம் வீர கோதண்டராமர்
8. சத்துவாச்சேரி, வேலூர் ஸ்ரீ ராமர்
9. முடிகொண்டான் கோதண்ட ராமர்
10. திருபுள்ளம்பூதங்குடி ஸ்ரீவல்வில் இராமர்
11. திருவெள்ளியங்குடி ஸ்ரீ கோலவில்லி இராமர்
12. திருப்புட்குழி ஸ்ரீ விஜயராகவப் பெருமாள்
13. பருத்தியூர் கோதண்டராமர்
14. அதம்பார் கோதண்டராமர்
15. விருதுநகர் ஸ்ரீ ராமர்
16. சிவகாசி கல்யாணராமர்
17. வடலூர் ராமர்
18. நெடுங்குணம் ராமச்சந்திரப் பெருமாள்
19. ரகுநாதசமுத்திரம், திருவண்ணாமலை மாவட்டம் ஸ்ரீ ஞான ராமர்20. இஞ்சிமேடு, திருவண்ணாமலை மாவட்டம் யாக சம்ரக்ஷண ராமர்
21. பெரிய கொழப்பலூர் ஸ்ரீ சதுர்புஜ ராமர்
22. படவேடு ஸ்ரீ யோக ராமச்சந்திரன்
23. ஊனமாஞ்சேரி (வண்டலூர் அருகில்) ஏரி காத்த ராமர்
24. அயோத்தியாபட்டினம், சேலம் கோதண்டபாணி
25. ராம்நகர், கோயம்பத்தூர் ஸ்ரீ ராமர்
26. ஒண்டிப்புதூர், கோயம்பத்தூர் ஸ்ரீ ராமர்
27. ஒசூர் ஸ்ரீ ராமர்
28. வேங்கடம்பட்டி (நெய்வேலி அருகில்) ஸ்ரீ ராமர்
29. பொன்பதிர்கூடம் ஸ்ரீ சதுர்புஜ ராமர்
30. மேப்பூர் ஸ்ரீ ராமர்
31. மாம்பலம், சென்னை கோதண்ட ராமர்
32. நந்தம்பாக்கம், சென்னை ஸ்ரீ கோதண்ட ராமர்
33. தரமணி, சென்னை ஸ்ரீ ராமர்
34. நூத்தஞ்சேரி, மாடம்பாக்கம், சென்னை கோதண்ட ராமர்
35. மதுரை பழங்காநத்தம் ராமர் கோவில்.
36. தஞ்சாவூர் புன்னைநல்லூர் சாளக்ராம கோதண்ட ராமர் , மேலராஜவீதி விஜய ராமர் கோவில், பஜார் பட்டாபிஷேக ராமர் கோவில்
37. இராமர் கோயில் விளாச்சேரி_மதுரை
38. குமரிமாவட்டம் அகஸ்தீஸ்வரம் ஸ்ரீராமர் ஆலயம்.






மதுரை கலையகம்

கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.



V.சுந்தரவடிவேல்

Visit: www.maduraikalaiyagam.com

Cell: 98428 05939

27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1




aanmeegamalar.com

## சிவனின் குணத்தை குறிக்கும் சொற்கள்

சிவ பெருமானை ஈசன், மகேஸ்வரன், ருத்ரன், மகாதேவன், சர்வேஸ்வரன், பரமேஸ்வரன், ஈஸ்வரன் என பல பெயர்களில் அழைக்கிறோம். இவற்றில் பல திருநாமங்களுக்கு என்ன பொருள், ஏன் சிவனை இத் திருநாமத்தால் அழைக்கிறோம் என தெரியாமலேயே வணங்கிவருவோம். ஆனால் இந்த ஒவ்வொரு திருநாமத்திற்கும் ஒவ்வொரு குணம் இருக்கிறது. இந்த ஒவ்வொரு திருநாமமும் சிவனின் பலவிதமான குணங்களை குறிக்கும் சொற்களால் உருவானதாகும்.



## சிவனின் எட்டு திரு நாமங்கள்

சிவனுக்கு எத்தனையோ திருநாமங்கள் இருந்தாலும் அவற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்தது எட்டு திருநாமங்கள். பவன், சர்வன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்ரன், பீமன், மகான் ஆகியவை மிகவும் உயர்வான சிவ பெருமானின் திருநாமங்களாகும். சிவனை மகா என்ற அடைமொழியுடன் இரு பெயர்களில் மட்டுமே குறிப்பிடுகிறோம். அதில் ஒன்று லிங்க வடிவமான மகாலிங்கம் என்றும், அஷ்டோத்திரத்தில் கடைசியாக குறிப்பிடப்படும் மகாதேவன் என்று குறிப்பிடு கிறோம்.

## சிவராத்திரியில் தீரும் பாவமும் இரட்டிப்பு பலன் தரும் மந்திரங்களும்

மகா சிவராத்திரி நாளில் விரதம் இருப்பதால் முன் ஜென்ம பாவங்கள் நீங்கும். நோய்கள், வறுமை நீங்கும். இந்நாளில் "ஓம் நம சிவாய" என்ற பஞ்சாட்சர மந்திரம், மகாமிருத்யுஞ்ஜய மந்திரம், சிவபுராணம் போன்றவற்றை பாராயணம் செய்வது மிகவும் சிறப்பானதாகும். இந்த நாளில் ருத்ராபிஷேகம் செய்வதும், கோவில்களில் நடக்கும் ருத்ராபிஷேகத்தில் கலந்து கொள்வதும் மிகவும் சிறப்பானதாகும். இந்த முறையில் மகா சிவராத்திரி விரதம் இருந்தால் முந்தைய மூன்று பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கும். மனக்கவலைகள், நோய்கள், வறுமை நிலை ஆகியன நீங்கும். அதோடு வாழ்வில் அனைத்து விதமான இன்பங்களும், உயர்வும் கிடைக்கும். நாம் செய்யும் வழிபாடு, பூஜை ஆகியவற்றிற்கு இரு மடங்கு பலனை தரக் கூடியது மகா சிவராத்திரி விரதம் ஆகும்.



aanmeegamalar.com

# ஒரே கோவிலில் அருள் பாலிக்கும் ஐந்து தட்சிணாமூர்த்திகள்

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் அருள்பாலிக்கும் பஞ்ச தட்சிணாமூர்த்திகள்!

திருநெல்வேலி மாநகரின் மத்தியில் அமையப் பெற்றுள்ளது ஸ்ரீ காந்திமதி அம்பாள் உடனுறை சுவாமி ஸ்ரீ நெல்லையப்பர் திருக்கோவில்.

இந்த கோவிலில் ஐந்து தட்சிணாமூர்த்தி சன்னதிகள் அமையப்பெற்றுள்ளது.

அவைகள்.,

1. சுவாமி நெல்லையப்பர் சன்னதி கோஷ்டத்தில் உள்ள தெற்கு நோக்கிய தட்சிணாமூர்த்தி.
2. சுவாமி நெல்லையப்பர் கோவில் தெற்கு பெரிய பிரகாரத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி.
3. திருக்கோவில் பொற்றாமரை குளத்தின் மேற்கு கரையில் உள்ள கால்மாற்றி அமர்ந்த தட்சிணாமூர்த்தி.
4. சுவாமி நெல்லையப்பர் கோவில் கிழக்கு பெரிய பிரகத்தில் யாக சாலை எதிரே உள்ள வன்னியடி தட்சிணாமூர்த்தி.
5. சுவாமி நெல்லையப்பர் கோவில் நுழைவாயிலின் வடபுறம் உள்ள முருகன் சந்நிதியில் காட்சிதரும் தெற்கு நோக்கிய தட்சிணாமூர்த்தி.

இந்த பஞ்ச (ஐந்து) தட்சிணாமூர்த்திகளையும் இந்த ஒரே கோவிலில் நாம் கண்டு வணங்க முடியும் என்பது வேறு எங்கும் இல்லாத சிறப்பம்சம் ஆகும்.




வாடிக்கையாளர் சேவையில் 25 ஆண்டுகள்

Bharatgas

Bharat Petroleum

COOK FOOD. SERVE LOVE

எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அருண் ஏஜன்ஸீஸ்

பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

MAK LUBRICANTS

டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ் சிவகங்கை மாவட்டம்.

Emergency No: 9443274648

1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.

போன் : 04574-264300, 265710

குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட் வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.


aanmeegamalar.com

# சித்திரை முதல் பங்குனி வரை பல்வேறு திருவிளையாடல்

## வருடம் முழுவதும் திருவிழாகாணும் மீனாட்சி ஆலயம்



சித்திரைதிருவிழா முதல் பங்குனி வசந்த உற்சவவிழா வரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் தமிழ் மாதம் தோறும் திருவிழாக்கள் நடைபெற்றுவருகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இறைவனின் 64 திருவிளையாடல்கள் வெவ்வேறு காலங்களில் இங்கு நடைபெறும், சித்திரை மாதம் முதல் பங்குனி வரை அனைத்து மாதமும் இங்கு விழாக் கோலம்தான்.

ஒவ்வொரு மாதமும் கொண்டாடப்படும் விழாவை பற்றி தெரிந்து கொள்வோம்.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் சித்ரா பவுர்ணமி விழா கொண்டாடப் பட்டாலும், மதுரையில்தான் சித்ரா பவுர்ணமி விழா சிறப்பாக கருதப்படுகிறது. ஒருமுறை விருத்ராசுவரன், விஸ்வரூபன் என்ற இருவரை தேவேந்திரன் கொன்றான். அவர்கள் பிறப்பால் அந்தணர்கள் ஆனதால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து கொண்டது. அதிலிருந்து விடுபட தன் குருவை நாடி உபாயம் கேட்டான். குருபகவான் அவனிடம் பூலோகம் சென்று பல்வேறு சிவஸ்தலங்களில் வழிபட்டால் ஒரிடத்தில் உன்கெடுதல் நீங்கும் என்று கூறினார்.



அதன்படி இந்திரன் காசி முதலிய பல தலங்களில் வழிபட்டு தெற்கு நோக்கி வந்தான். ஓரிடத்தில் கடம்ப மரத்தின் கீழ் சென்றவுடன் தன்னை பற்றியிருந்த தோஷம் விலக்கண்டான். இந்திரன் மகிழ்ச்சியடைய அவன் முன் கடம்ப மரத்தடியில் சிலபெருமான் திருஆலவாய் சோமகந்தர் அவனுக்கு காட்சி கொடுத்தார். இந்திரன் சிவபெருமானுக்கு கோவில் கட்ட நினைத்து தேவலோகத்தில் இருந்து ஒரு விமானம் வரவழைத்தான்.

இத்தலத்து இறைவனுக்கு இந்திரன் விமானம் அமைத்ததால் அதற்கு இந்திர விமானம் என்றும், விண்ணில் இருந்து வந்ததால் விண்ணிழி விமானம் என்றும் சொல்லப்படுகிறது.

இந்திரனிடம் ஒவ் வொரு வருடமும் சித்ரா பவுண்மி நாளில் என்னை இங்கு வந்து வழிபடுக என்று கட்டளையிட்டார். ஒவ்வொரு வருடமும் சித்ரா பவுர்ணமி நாளில் இந்திரன் இங்கு வந்து வழிபடுகிறான் என்று திருவிளையாடல் புராணம்கூறுகிறது.

அதனால் தான் சித்ராபவுர்ணமி மதுரையில் சிறப்பாக கருதப்படுகிறது.

வைகாசி வைகாசி மாதம் கோடை வசந்த திருவிழா, திருவாதிரை நட்சத்திரத்தில் இருந்து பத்து நாட்கள் எண்ணெய்க் காப்பு நடக்கிறது.

ஆனி மாதம் மகம் நட்சத்திரத்திருந்து

aanmeegamalar.com

# பார்வையால் அருள்பாலிக்கும் மீனாட்சி

மதுரை மீனாட்சி அம்பாளின் விக்கிரகம், மரகதக் கல்பச்சைக் கல்லால் ஆனது. அம்பாள் மீனாட்சியின் கருவறையானது, 32 சிங்க உருவங்களும், 64 சிவகணங்களும், 8 கல்யானைகளும் தாங்கி நிற்கும் அபூர்வமானதாகும்.

இந்தக் கருவறை விமானத்தைத் தேவேந்திரன் அமைத்தான். மீன் போன்ற கண்களைப் பெற்றவர் என்பதால், மீனாட்சி என்று பெயர்பெற்றார். மீன், தன்னுடைய முட்டைகளைத் தனது பார்வையாலேயே தன்மயமாக்குவது போல, மீனாட்சி அம்மன், தனது பக்தர்களை, அருட்கண்ணால் நோக்கி அருள்பாலிக்கிறவள்.

மீனாட்சியம்மன் திருக்கோலத்தில், கிளியும் இடம்பெற்றுள்ளது. பக்தர்களின் கோரிக்கையை, அம்பிகைக்கு நினைவூட்ட, திரும்பத் திரும்ப, கிளி சொல்லிக் கொண்டிருப்பதாக நம்பிக்கையுள்ளது. இந்திரன் சாப விமோசனத்திற்காக, இத்தலத்தினைத் தேடி வந்தபோது, கிளிகளே, சிவவழிபாட்டிற்கு உதவி செய்தன.

இவருக்குப் பச்சைதேவி, மரகதவல்லி, தடாதகை, அபிசேகவல்லி, அபிராமவல்லி, கயற்கண்குமாரி, கற்பூரவல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தரவல்லி, பாண்டிப் பிராட்டி, மதுராபுரித் தலைவி, மாணிக்க வல்லி, மும்முலைத்திருவழுதி மகள் போன்ற எண்ணற்றப் பெயர்கள் உள்ளன.

ஊஞ்சல் உற்சவம். தினமும் மாலை ஆறு மணியில் இருந்து இரவு ஒன்பது மணி வரைக்கும் நூறு கால் மண்டபத்தில் ஒரே ஊஞ்சலில் சுந்த ரேசுவரர் மீனாட்சி அமர்ந்து ஊஞ்சலாட, கோயிலின் ஒதுவார்கள். மாணிக்க வாசகரின் பொன்னூஞ்சல் பாடங்களை பாட ஊஞ்சல் உற்சயம் நடைபெறுகிறது.

பத்து நாளைக்கு முளைக் கொட்டு உற்சவம் நடைபெறுகிறது. கொடியேற்றம் மீளாட்சிக்கு மட்டுமே நடைபெறும்.

ஆவணி மாதம் மூலத் திருநாள், ஆவணி மூல உற்சவம் என்றே பெயர் பெற்றது. நான்கு ஆவனி வீதிகளிலும் அம்பாளும், சுந்தரேசுவாரும் வீதி உலா வருவார்கள் திருவிளையாடல், பிட்டுக்கு மண்ட சுமந்த திரு விளையாடல், நரியை பரியாக்கியது. விறகு விற்றல் போன்ற திருவிளையாடல்கள் நடைபெறும். மூல நட்சத்திரத்தின்று கந்தரேசுவரருக்கு பட்டாபி சேகம் நடைபெறுகிறது.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி கொலு விழா நடைபெறுகிறது. ஒவ்வொரு அலங்காரத்தில் மீனாட்சி அலங்காரத்தை காண ஏராளமான பக்தர்கள் வருவார்கள்.

ஐப்பசி மாத பிரதமையிலிருந்து அமாவாசை நாளிற்கு அடுத்த நாள் சஷ்டி, அமாவாசை நாளிலிருந்து ஆறாவது நாள் வரையிலும் கோலாட்ட உற்சவம். புது மண்டபத்திலே அம்மன் கொலுவிருந்து மதுரை இளம்பெண்கள் கூடியிருந்து கோலாட்டமாட உற்சவம் நடக்கிறது.

கார்த்திகை மாதம் பத்து நாட்கள் தீப உற்சவம். கார்த்திகை தீபதின்னத்தில் அம்மன் சன்னதியிலும் சுந்தரேசுவரர் சன்னதியிலும் சொக்கப்பனை கொளுத்தப் படுகிறது.

மார்கழி தனுர் மாத வழக்கப்படி காலையில் சீக்கிரமே நடை திறந்து இரவு ஒன்பது மணிக்கு நடுநிசி முடிந்து விடுகின்றது. தினமும் வெள்ளியம்பல நமாளர்சன்னதியிலிருந்து மாணிக்கவாசகர்முன்பாக கோவிலின் ஆஸ்தான ஓதுவார்கள் திருவெம்பாவை பாடல் களை பாடி போற்றுவார்கள். அதிகாலை 5.30மணியில் இருந்தே இது நடக்கும். இதில் பத்து 'நாட்கள்' எண்ணெய்' காப்பு நடக்கும். இந்த பத்து நாட்களும் சுவாமியும், அம்பாளும் புறப்பாடு கிடையாது. மாணிக்கவாசகர் மட்டுமே புறப்பாடு நிகழ்வு நடைபெறும். பதினோராம் நாள் ரிஷபவாகனத்தில் அம்மன் சுவாமி ஆடி வீதியில் வலம் வருகிறார்.

தை தை மாதம் தெப்பத் திருநாள் நடக்கும். வண்டியூரில் திருமலை நாயக்கரால் தோண்டப்பட்ட தெப்பக்குளத்தில் வசந்த மண்டபத்தில் தெப்பம்' கட்டி சுவாமியையும், அம்பாளையும் அதில் எழுந்தருளச் செய்து தெப்பவிழா நடைபெறும்.

மாசி மக உற்சவம் பங்குனி வசந்த உற்சவம் மண்டல உற்சவம் நடைபெறும். இதுதவிர பங்குனி உத்திரம், சாரதா நவராத்திரி இரண்டும் சேர்ந்து வரும் திருவிழா. பங்குனி மாதத் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து உத்திரம் நட்சத்திரம் வரை அம்மனும் சுவாமி யும் வெள்ளியம்பலத்திலேயே அமர்ந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்கள். சுவாதி நட்சத்திரத்தன்று இருவரும் மகனின் திருமணக்கோலம் காண திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு எடுத்து செல்லப்படுகிறார்கள். மேலும் அகிலம்போற்றும் அன்னை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தினசரி பூஜைகள் செய்யப்படுவதுடன் சிவபெருமானுக்கு உகந்த நாட்களாக கருதப்படும் அனைத்து நாட்களிலும் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன.


சத்துமாவு


41 வகையான சிறுதானியங்களில் தரமான முறையில் தயாரிக்கப்பட்டது

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமான இயற்கை உணவு, எந்தவித கலப்பட இரசாயன கலப்படமும் இல்லை ஆரோக்கியத்தை காக்கும் உணவு.

பாரம்பரிய முறையில் சிறுதானிய வகைகளைக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது.






SPECIAL FOOD

fssai REGISTRATION 22424543000080

7550199561

geethasamayalspacialfood@gmail.com

home made products

# கணக்கன்பட்டி சித்தர் நிகழ்த்திய அற்புதங்கள்







பழனி முருகன் திருக்கோவில் அருகில் இருந்து 8கிமீ தொலைவில் இருக்கும் கிராமம் தான் கணக்கன்பட்டி. இங்கும் வாழ்ந்த மிக சக்தி வாய்ந்த மகான் கணக்கன்பட்டி மூட்டை சாமி என்கிற சத்குரு காளிமுத்து பழனி சாமி சித்தர்.

சாய்பாபாவின் மறு அவதாரமாக கருதப்படும் இவர் வாழும் போதே பல அதிசயங்கள் நிகழ்த்தியவர். ஒருநாள் வெளிநாட்டில் இருந்து ஒரு குடும்பம் பேச முடியத தன் குழந்தைக்கு பேச்சு வர பழனி முருகனை காண காரில் வந்து கொண்டு இருந்தனர்.


அப்போது அந்த கார் கணக்கன்பட்டி வழியே வரும் போது அங்கு ஒரு பெரியவர் பச்சை வேஸ்டி சட்டை யுடன் தலை பாகையுடன் வழிமறித்தார். இவர்கள் பயத்துடன் இறங்கினர். இவர்கள் சுத்த சைவம் சாமி அவர்கள் ”இந்த பொம்பல போய் எதிருல இருக்கற கடையில் பிரியாணி வாங்கிவா” என்றார்.

இவர்கள் முழித்தார், அருகில் இருந்தவர்கள் சாமி சொல்வதை செய்து விடுங்கள் சாமி சக்தி வாய்ந்தவர் என்றனர்.

மூக்கை பிடித்து கொண்டு வாங்கி வந்தார் அந்தபெண் மணி. இந்த சாப்பாட்டை அந்த பையனுக்கு கொடு என் றார்.

தடுமாறினர் அந்த பெண்மணி பொட்டலம் பிரித்து பார்த்தார் அந்தபெண்மணிவாங்கி வந்த பிரியாணி சாம்பார் சாதம் ஆக மாறி இருந்தது.

இதை கண்டு ஆச்சரி யத்துடன் கை எடுத்து



உ
குருவே சிவமென கூறினன் நந்தி -

# ஓம் ஸ்ரீ சற்குரு பழனிசாமி சுவாமிகள் ஜீவசமாதி சிறப்பு பூஜை தினங்கள்

| மாதம் | ★ புனர்பூசம் | | | ● அமாவாசை | | | பௌர்ணமி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தேதி | நாள் | நேரம் | தேதி | நாள் | நேரம் | தேதி | நாள் | நேரம் |
| ஜனவரி | 13-01-2025 | திங்கள் | பகல் | 28-01-2025 | செவ்வாய் | இரவு | 13-01-2025 | திங்கள் | பகல்/இரவு |
| | | | | 29-01-2025 | புதன் | பகல் | | | |
| பிப்ரவரி | 10-02-2025 | திங்கள் | பகல் | 27-02-2025 | புதன் | பகல்/இரவு | 11-02-2025 | செவ்வாய் | இரவு |
| | | | | | | | 12-02-2025 | புதன் | பகல் |
| மார்ச் | 09-03-2025 | ஞாயிறு | பகல் | 28-03-2025 | வியாழன் | இரவு | 13-03-2025 | வியாழன் | பகல்/இரவு |
| | | | | 29-03-2025 | வெள்ளி | பகல் | | | |
| ஏப்ரல் | 05-04-2025 | சனி | பகல் | 27-04-2025 | ஞாயிறு | பகல்/இரவு | 12-04-2025 | சனி | பகல்/இரவு |
| மே | 03-05-2025 | சனி | பகல் | 26-05-2025 | திங்கள் | பகல்/இரவு | 11-05-2025 | ஞாயிறு | இரவு |
| | 30-05-2025 | வெள்ளி | பகல் | | | | 12-05-2025 | திங்கள் | பகல் |
| ஜூன் | 26-06-2025 | வியாழன் | பகல் | 24-06-2025 | செவ்வாய் | இரவு | 10-06-2025 | செவ்வாய் | பகல்/இரவு |
| | | | | 25-06-2025 | புதன் | பகல் | | | |
| ஜூலை | 24-07-2025 | வியாழன் | பகல் | 24-07-2025 | வியாழன் | பகல்/இரவு | 10-07-2025 | வியாழன் | பகல்/இரவு |
| ஆகஸ்ட் | 20-08-2025 | புதன் | பகல் | 22-08-2025 | வெள்ளி | பகல்/இரவு | 08-08-2025 | வெள்ளி | இரவு |
| | | | | | | | 09-08-2025 | சனி | பகல் |
| செப்டம்பர் | 16-09-2025 | செவ்வாய் | பகல் | 21-09-2025 | ஞாயிறு | பகல்/இரவு | 07-09-2025 | ஞாயிறு | பகல்/இரவு |
| அக்டோபர் | 14-10-2025 | செவ்வாய் | பகல் | 20-10-2025 | திங்கள் | இரவு | 06-10-2025 | திங்கள் | பகல்/இரவு |
| | | | | 21-10-2025 | செவ்வாய் | பகல் | | | |
| நவம்பர் | 10-11-2025 | திங்கள் | பகல் | 19-11-2025 | புதன் | பகல்/இரவு | 04-11-2025 | செவ்வாய் | இரவு |
| | | | | | | | 05-11-2025 | புதன் | பகல் |
| டிசம்பர் | 07-12-2025 | ஞாயிறு | பகல் | 19-12-2025 | வெள்ளி | பகல்/இரவு | 04-12-2025 | வியாழன் | பகல்/இரவு |

- பௌர்ணமி, அமாவாசை நாட்களில் காலை 6.00, பகல் 12.00, மாலை 6.00, இரவு 12.00 மணிக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெறும் -

- மாதந்தோறும் பகவான் புனர்பூச நட்சத்திரத்தன்று திருவாசக முற்றோதல் - அனைவரும் கலந்து அருள்பெறுக -

வணங்கிவிட்டு பழனி நோக்கி சென்றனர்.

அப்போது அவர்களின் காருக்கு எதிரில் ஒரு வண்டி வந்தது அதை கண்ட அந்த சிறுவன் அம்மா வண்டி என்று கத்தினான்.

அந்த சிறுவனிடம் இதை சற்றும் எதிர் பார்க்காத அந்த பெண்மணி சாமியின் மகிமை கண்டு ஆனந்த கண்ணீர் வடித்தார் .அவர் இருக்கும் திசை நோக்கி வணங்கினார். இவ்வாறாக பலரின் கர்ம வினை தீர்த்து அவர்களின் வாழ்க்கையை மாற்றியவர் நம் சித்தர் கணக்கன்பட்டி மூட்டை சாமி.

இவரிடம் யார் சென்றாலும் போய் அந்த கல்லு எடுத்து அங்க போடு, இங்க கூடு கட்டு என்று சொல்லுவார். ஒரு முறை ஒருவர் நிலம் வாங்க இவரிடம் உத்தரவு கேட்கும் போது, கிழக்கு போய் வடக்கு போ என்று சூசகமாக கூறினார். உத்தரவு கேட்கவந்தவர் இரண்டு நிலம் பார்த்துள்ளார். அதில் ஒன்று வடக்கில் இருந்துள்ளது அதன் வழி கிழக்கு பார்த்து இருந்துள்ளது. கிழக்கு போய் வடக்கு போ என்று சுவாமி இதை தான் சூசகமாக கூறி உள்ளார் என்று எண்ணி அவரும் அந்த நிலத்தை வாங்கி வளர்ச்சி அடைந்துள்ளார்.

இவரின் ஜீவ சமாதிக்கு சென்றால் நிச்சயம் மாற்றம் உண்டாகும்.

இவரின் ஜீவ சமாதியில் ஒரு நல்ல அதிர்வலைகளை நன்றாக உணரலாம். பழனி பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 8கிமீ தொலைவில் உள்ளது பஸ் வசதியும் உள்ளது.

கணக்கம்பட்டி சுவாமிகளின் ஜீவ சமாதி குருபூஜை பதினோராம் ஆண்டுப் பெருவிழா 8.03.2025 முதல் 9.03.2025 வரை நடைபெற உள்ளது.


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்

தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை

அரசு பதிவு பெற்ற மருத்துவமனை

மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் எதிர்புறம்,
அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி,
தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு,
MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர், காவல் நிலையம் பின்புறம், இராமநாதபுரம்.
அலைபேசி: 9944167183, 9360132498

HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 • ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL

இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.

Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com

Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791




தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics

# சென்னையில் உள்ள பழமை வாய்ந்த கோயில்கள்

- ✪ ஆதம்பாக்கம் ஸ்ரீ நந்தீஸ்வரர் கோயில்
- ✪ அயனாவரம் ஸ்ரீ பரசுராமலிங்கேஸ்வரர் கோயில்
- ✪ எழுச்சூர் ஸ்ரீ நல்லிணக்கீஸ்வரர் கோயில்
- ✪ காட்டூர் (பொன்னேரி) திருவல்லீஸ்வரர் கோயில்
- ✪ கோயம்பேடு ஸ்ரீ குருங்கலீஸ்வரர் கோயில்
- ✪ குன்றத்தூர் ஸ்ரீ முருகன் கோயில்
- ✪ குன்றத்தூர் ஸ்ரீ வட நாகேஸ்வரர் கோயில்
- ✪ மாடம்பாக்கம் ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் கோயில்
- ✪ மைலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில்
- ✪ மயிலாப்பூர் ஸ்ரீ விருபாக்ஷேஸ்வரர் கோயில்
- ✪ மயிலாப்பூர் ஸ்ரீ மாதவ பெருமாள் கோயில்
- ✪ மயிலாப்பூர் ஸ்ரீ ஆதி கேசவ பெருமாள் கோயில்
- ✪ பம்மல் ஸ்ரீ அக்கீஸ்வரர் கோயில்
- ✪ பாடி திருவலிதாயம் ஸ்ரீ திருவல்லீஸ்வரர் கோயில்
- ✪ பூவிருந்தமல்லி ஸ்ரீ வரதராஜபெருமாள் கோயில்
- ✪ புரசைவாக்கம் ஸ்ரீ கங்காதீஸ்வரர் கோயில்
- ✪ சைதாப்பேட்டை ஸ்ரீ பிரசன்னவேங்கட நரசிம்ஹ கோயில்
- ✪ சைதாப்பேட்டை ஸ்ரீ காரணீஸ்வரர் கோயில்
- ✪ திருப்போரூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
- ✪ திருவலிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோயில்
- ✪ திருவல்லிக்கேணி ஸ்ரீ திருவேட்டீஸ்வரர் கோயில்
- ✪ திருவல்லிக்கேணி ஸ்ரீ தீர்த்தபாலீஸ்வரர் கோயில்
- ✪ திருவொற்றியூர் ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் கோயில்
- ✪ திருவான்மியூர் ஸ்ரீ மருந்தீஸ்வரர் கோயில்
- ✪ திருமழிசை ஸ்ரீ ஜகன்னாதபெருமாள் கோயில்
- ✪ திருமுல்லைவாயல் ஸ்ரீ மாசிலாமணீஸ்வரர் கோயில்
- ✪ திருநீர்மலை ஸ்ரீ ரங்கநாத பெருமாள் கோயில்
- ✪ திரிசூலம் ஸ்ரீ திரிஸுலநாதர் கோயில்
- ✪ வேளச்சேரி ஸ்ரீ தண்டீஸ்வரர் கோயில்
- ✪ வில்லிவாக்கம் ஸ்ரீ சௌம்யாதாமோதர பெருமாள் கோயில்
- ✪ வில்லிவாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில்
- ✪ வடபழனி வேங்கிஸ்வரர் கோயில்
- ✪ வியாசர்பாடி ஸ்ரீ ரவீஸ்வரர் கோயில்
- ✪ நெமிலிச்சேரி ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயில்
- ✪ கோடம்பாக்கம் பாரத்வாஜேஸ்வரர் கோவில்

பிற்கால கோயில்கள்:

- ✪ 1200 வளசரவாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் கோயில்
- ✪ 1500 நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில்
- ✪ 1639 காளிகாம்பாள் கோவில்
- ✪ 1673 ஜார்ஜ் டவுன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
- ✪ 18ம் நூற்றாண்டு கொசபேட்டை ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
- ✪ 1700 ராயபுரம் ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி கோயில்
- ✪ 1717 மண்ணடி ஸ்ரீ செங்கழுநீர் பிள்ளையார் கோயில்
- ✪ 1734 சிந்தாதரிபேட்டை ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர் கோயில்
- ✪ 1735 ஜார்ஜ் டவுன் ஸ்ரீ கச்சளீஸ்வரர் கோயில்
- ✪ 1762 பாரி முனை ஸ்ரீ சென்னகேசவ பெருமாள் கோயில்
- ✪ 1779 தண்டையார்பேட்டை ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் கோயில்
- ✪ 1787 மண்ணடி ஸ்ரீ கிருஷ்ணன் கோயில்
- ✪ 19ம் நூற்றாண்டு அயனாவரம் ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயில்
- ✪ 1800 கோலெட்பெட் ஸ்ரீ கல்யாண வரதராஜ பெருமாள் கோயில்
- ✪ 1806 ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அகஸ்தீஸ்வரர் கோயில்
- ✪ 1806 ஜார்ஜ் டவுன் ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயில்
- ✪ 1850 மேற்கு மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் கோயில்
- ✪ 1880 வடபழனி ஸ்ரீ முருகன் கோயில்
- ✪ 1900 நங்கநல்லூர் ஸ்ரீ அர்தனாரீஸ்வரர் கோயில்
- ✪ நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயில்.




aanmeegamalar.com

# தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சிவன் கோயில்கள்

இந்தியாவில் இருக்கும் சிவன் கோயில்களில் பாதிக்கு மேற்பட்ட கோயில்கள் தமிழ்நாட்டில்தான் உள்ளன.

அதாவது தமிழ்நாட்டில் மட்டும் 2500க்கும் அதிகமான சிவாலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றில் பெரும்பாலான வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில்கள் சோழர்கள் காலத்தில் கட்டப்பட்டவையாகும். அதேபோல மற்ற பேரரசுகளின் காலத்திலும் கணிசமான அளவு சிவன் கோயில்கள் தமிழ்நாட்டில் எழுப்பப்பட்டுள்ளன. இப்படியாக கட்டப்பட்ட சிவன் கோயில்களில் சில சிவன் கோயில்கள் வரலாற்று மற்றும் ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

அதாவது சைவ சமயத்தில் கூறப்படும் 28 ஆகமங்களின் அடிப்படையில் முக்கியமான சிவன் கோயில்களைப் பற்றி இங்கே காண்போம்...

## திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில்

கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டியிலிருந்து 2 கிமீ தொலைவில் திருவதிகை வீரட்டானேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் தமிழ்நாட்டில் உள்ள எட்டு வீர சைவக் கோவில்களுள் ஒன்றாகும். இத்திருக்கோயிலின் கர்ப்பகிரக விமானத்தை பார்த்து இராஜ இராஜ சோழன் பிற்காலத்தில் தஞ்சையில் பெரிய கோயிலைக் கட்டியதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அதேபோல பெரிய கோயில் விமான நிழல் கீழே விழாது என்ற நம்பிக்கை இருப்பது போல், திருவதிகை கோயிலின் நிழலும் தரையில் விழாதபடி கணித சாஸ்திர முறையுடன் பல்லவர்களால் இதை கட்டியதாக சொல்லப்படுகிறது.

## நெல்லையப்பர் ஆலயம்

திருநெல்வேலியிலுள்ள நெல்லையப்பர் ஆலயமானது, தமிழகத்திலேயே மிகப்பெரிய சிவாலயமாகும். இது பாண்டிய மன்னர்களால் கி.பி. 700 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. சிவபெருமானுக்கும், பார்வதி தேவிக்கும் தனித்தனியே கட்டப்பட்ட இரண்டு கோயில்களை உள்ளடக்கிய பிரம்மாண்டமான கோயில் இது. இரண்டு கோயில்களும், 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சங்கிலி மண்டபம் என்னும் மண்டபத்தால் இணைக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் கோபுரங்களும் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவையாகும்.

## தியாகராஜர் கோயில், திருவொற்றியூர்

சென்னையிலிருந்து 16 கி.மீ தொலைவில் உள்ள திருவொற்றியூரில் தியாகராஜர் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் பல்லவ மன்னர்களால் 7ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. எனினும் அதற்கு பிறகு 11ஆம் நூற்றாண்டில் சோழர்களால் பெரிதாக புதுப்பித்து கட்டப்பட்டுள்ளது. இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவபெருமானின் விக்கிரகமும், திருவாரூர் தியாகராஜசுவாமி திருகோயிலில் உள்ள சிவன் சிலையும் ஒரே மாதிரியான தோற்றத்தை கொண்டவை.

## ஸ்ரீ மாயூரநாதசுவாமி கோவில்

மயிலாடுதுறையின் மிகபெரிய கோயிலாக ஸ்ரீ மாயூரநாத சுவாமி கோவில் திகழ்கிறது. இந்தக் கோயில் சுவர்களிலுள்ள மிகப் பழமையான பதிவுகளாக குலோத்துங்க சோழரின் பதிவுகள் உள்ளன. அதன் ஆரம்ப கட்டுமானத்திற்கு பிறகு, சற்றே புனரமைக்கப்பட்ட இந்த கோயில் சோழர்களின் கட்டிடக்கலைக்கு சான்றாக இன்னமும் விளங்குகிறது. இக்கோயிலின் நடராஜ பெருமானுக்காக ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் மாயூரா நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி எண்ணற்றவர்களை இக்கோவிலை நோக்கி ஈர்த்துவிடும். இந்த திருவிழாவை, சிதம்பரம் நாட்டியாஞ்சலி திருவிழா நடக்கும் வேளைகளில் மகா சிவராத்திரியையொட்டி சப்தஸ்வரங்கள் டிரஸ்ட் என்ற அமைப்பு நடத்தி வருகிறது.

## ஜம்புகேசுவரர்கோயில், திருவானைக்காவல்

திருவானைக்காவல் கோயிலின் மூலவரான ஜம்புகேஸ்வரர் 5ஆம் உள் பிரகாரத்தில் சுயம்புவான அப்புலிங்கமாக எழுந்தருளியுள்ளார். அதாவது வடமொழியில் 'அப்பு' என்பதன் பொருள் நீர் என்பதாகும். இந்த லிங்கம் இருக்குமிடம் தரைமட்டத்திற்குக் கீழே இருப்பதால் எப்போதும் தண்ணீர் கசிவு இருந்துகொண்டே இருக்கும். முற்றிய கோடையில், காவேரி வறண்டிருக்கும் நேரங்களிலும், இந்நீர்க்கசிவு வற்றுவதில்லை என்று சொல்லப்படுகிறது. 18 ஏக்கர் பரப்பளவை கொண்ட இந்த கோயில் ஆரம்ப கால சே□ழ மன்னர்களில் ஒருவரான கோச்செங்க சோழநாள் கட்டப்பட்டதாகும். இங்கு அம்மன் அகிலாண்டேஸ்வரியின் தனி சன்னதி நான்காம் பிரகாரத்தில் உள்ளது.

## பிரகதீஸ்வரர் கோயில், தஞ்சாவூர்

தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு கட்டப்பட்ட கோயில்கள் எத்தனை இருந்தாலும் தஞ்சை பெரிய கோயிலுக்கு ஈடு இணை ஏதுமில்லை. வட நாடெங்கும் பயணித்து பல வெற்றிகளை சுமந்து வந்த ராஜராஜ சோழன் தான் வழியில் கண்ட பல்வேறு சிற்பக்கலை மரபுகளைச் சேர்ந்த கோயில்களின் தோற்றத்தில் கவரப்பட்டு அவற்றினும் சிறந்த ஒரு உன்னத கலைப்படைப்பை தனது ராஜ்ஜியத்தில் நிர்மாணிக்க விரும்பி மிகுந்த முனைப்புடன் இந்தக் கோயிலை உருவாக்கியிருக்க வேண்டும் என்பது சில வரலாற்று ஆசிரியர்களின் கருத்து. வார்த்தைகளில் விவரிக்க முடியாத நுண்ணிய வடிவமைப்பு, கற்பனா சக்தி, மேலாண்மை துல்லியம், பொறியியல் நுணுக்கங்கள், அப்பழுக்கற்ற ஒழுங்கு, துளியும் பிசகாத கணக்கீடுகள் போன்ற அறிவியல் பூர்வமான நுட்பங்கள் இந்த


ஒட்டுமொத்த கோயிலின் உருவாக்கத்தில் நிரம்பியுள்ளன என்றால் அது மிகையில்லை.

## தில்லை நடராஜர் கோயில்

மனிதனின் உடம்பும் கோயில் என்பதனை விளக்கும் வகையில் சிதம்பரம் நடராஜர் கோயில் அமைந்துள்ளது. மனித உடலானது அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்து சுற்றுகளை கொண்டது. அதன் அடிப்படையில் நடராஜர் கோயிலில் ஐந்து திருச்சுற்றுகள் என்னும் பிரகாரங்கள் உள்ளன.

அதேவேளை மனிதனுக்கு இதயம் (ஆகாயம்) இடப்புறம் அமைந்திருப்பது போல் மூலவர் இருக்கும் கருவறை கோயிலின் இடதுபுறமாக சற்று நகர்ந்து இருக்கிறது.

அதோடு சராசரியாக ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 21,600 முறை இதயத்தின் உதவியால் மூச்சுவிடுகிறான் என்பதை குறிக்கும் விதமாக கருவறையின் மீதுள்ள கூரை 21600 ஓடுகளால் வேயப்பட்டு இருக்கிறது.





## மருந்தீஸ்வரர் கோயில், சென்னை

சோழ நாட்டை பல்லவம் ஆந்திரம் போன்ற ராஜ்ஜியங்களுடன் இணைத்த வடப்பெரு வழி எனும் முக்கிய சாலையில் இந்த கோயில் இருந் ததை வரலாற்றுச்சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. அந்த பாதைதான் இன்றைய ஈ.சி.ஆர் எனும் கிழக்குக்கடற்கரைச்சாலையாக உருமாறியுள்ளது.

## ஸ்ரீ இராமநாதசுவாமி கோவில்

12 ஜோதிர்லிங்க கோயில்களில் தமிழ்நாட்டில் அமைந்துள்ள ஒரே ஜோதிர்லிங்க ஆலயமாக இராமேஸ்வரத்தில் உள்ள ஸ்ரீ இராமநாதசுவாமி கோவில் புகழ்பெற்றுள்ளது. மேலும் இராமேஸ்வரம் என்ற பெயர் வரக்காரணமாக ஸ்ரீ இராமநாதசுவாமி கோவிலை குறிப்பிடலாம். அதாவது இராவணனை கொன்ற பாவத்தினை நீங்க இராமன் மணல்களால் ஆன லிங்கத்தை இங்கு பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்று நம்பப்படுகிறது. இதன் காரணமாக இராமன் ஈஸ்வரனை வணங்கிய இடம் என்ற பொருளில் 'இராம+ஈஸ்வரம்' இராமேஸ்வரம் ஆனது

## கபாலீசுவரர் கோயில், சென்னை

சென்னையின் பழமையான மைலாப்பூர் பகுதியில் இந்த கபாலீசுவரர் கோயில் வீற்றுள்ளது. இந்த கோயில் சிவபெருமான் மற்றும் அவரது துணைவியார் பார்வதி தேவிக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இன்று சாந்தோம் சர்ச் உள்ள இடத்தில் வீற்றிருந்த கபாலீசுவரர் கோயிலின் ஆதி அமைப்பு போர்த்துகீசியர்களால் சிதைக்கப்பட்ட பிறகு தற்போது நாம் காணும் கோயில் விஜயநகர மன்னர்களால் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர்.

## திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோயில்

சென்னையிலிருந்து 67 கி.மீ தொலைவில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ள வேதகிரீஸ்வரர் கோயில் 1400 ஆண்டுகள் பழமையானது. இங்கு காணப்படும் ஒரு கல் மண்டபம் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் (கி.பி. 610640) காலத்தில் கட்டப்பட்ட சிவனுக்குரிய குடைக்கூளி என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அதுமட்டுமல்லாமல் 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர், சோழர், பாண்டியர், ராஷ்டிரகூடர் காலத்திய கல்வெட்டுக்களும் இங்கே கிடைத்துள்ளன.

## தியாகராஜஸ்வாமி திருக்கோயில்

சோழ மன்னர்களால் கட்டப்பட்டு தமிழ்நாட்டின் மிகப் பழமையான கோயில்களுள் ஒன்றாக திகழ்ந்து வரும் தியாகராஜஸ்வாமி திருக்கோயில் 1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக்கோயிலின் மூலஸ்தானத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதியை "வன்மிகிநாதர்" என்ற பெயரில் வழங்கப்படும் சிவபெருமானுக்கும், மற்றொரு பகுதியை தியாகராஜருக்கும் அர்ப்பணித்துள்ளனர். வன்மிகிநாதருக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள பகுதியானது, தியாகராஜருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள பகுதியைக் காட்டிலும் பழமை வாய்ந்ததாகும். வன்மிகிநாதரின் சந்நிதியில், லிங்கத்துக்கு பதிலாக, ஒரு புற்று நிறுவப்பட்டுள்ளது.

## ஸ்ரீ கும்பேஸ்வரர் ஆலயம்,

கும்பகோணத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கும்பேஸ்வரர் ஆலயம் ஒரு சிவாலயமாகும். இக்கோவிலில் தான் ஆண்டுதோறும் மாசிமக விழாவும், 12 ஆண்டுகளுக்கொருமுறை மகாமகப் பெருவிழாவும் கொண்டாடப்படுகின்றன. இக்கோவில் 1300 ஆண்டுகள் பழமையானதென நம்பப்படுகிறது. இடைக் காலச் சோழர்கள் இந்நகரத்தை ஆண்டபொழுதிலிருந்து இக்கோவில் உள்ளது. இக்கோவிலில் சிவபெருமான் ஆதி கும்பேஸ்வரர் என்னும் பெயருடன் வழிபடப்படுகிறார்.

## ஸ்வேதாரண்யேஸ்வரர் கோயில்

தமிழ்நாட்டிலுள்ள ஒன்பது நவக்கிரக ஸ்தலங்களுள், இது நான்காவது ஸ்தலமாகும். இந்தக் கோயில் 1000 முதல் 2000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாக நம்பப் படுகிறது. இக்கோயிலில், நவக்கிரகங்களுள் ஒருவரும், பக்தர்களுக்கு அறிவும், செல்வமும் வழங்கக்கூடியவருமான புதன் பகவானுக்கு தனி சந்நிதி அமைத்து வணங்கி வருகின்றனர். இங்கு சிவபெருமான், "ஸ்வேதாரண்யேஸ்வரர்" என்ற


ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை

மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்

பீனாஸ் பத்திர எழுத்தகம்

பத்திர எழுத்தர், மானாமதுரை



Prop.N.P.வேல்முருகன் B.Com

State Document Writer

செல்: 99526 39497


95851 88741

திருப்பெயருடன், மூலவராக இருந்து அருள் பாலிக்கிறார். பார்வதி தேவி, "பிரம்மவித்யா நாயகி" என்ற பெயரில் வழிபடப்படுகிறார்.

## பழமலைநாதர் கோயில் விருத்தாச்சலம்

கடலூர் மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில் அமைந்துள்ள பழமலைநாதர் கோயில் சைவத் திருத்தலங்களில் முக்கியமானதாகும். இந்தக் கோயிலில் 5 கோபுரம், 5 நந்தி, 5 தேர், 5 கொடிமரம் என எல்லாமே ஐந்து ஐந் தாக அமைந்துள்ளது. இத்தலம் காசியை விட புண்ணியம் அதிகம் கொண்டதென நம்பப் படுகிறது. இதனால் விருத்தகாசி என்கிற சிறப்புப்பெயரும் இவ்வூருக்கு உண்டு





## சோமேஸ்வரர் ஆலயம், கும்பகோணம்

சோமேஸ்வரர் ஆலயம் கும்பகோணத்தில் அமைந்துள்ள ஒரு சிவாலயமாகும். இந்தக் கோயிலின் கட்டிட வடிவமைப்பை பார்க்கும் பொழுது 13ஆம் நூற்றாண்டு திராவிடக் கட்டிடக் கலை உடனடியாக நினைவுக்கு வருகிறது. இக்காலத்தில்தான் பிற்காலச் சோழர்கள் கும்ப கோணத்தை ஆண்டு வந்தனர். உண்மையில் இக்கோவில் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் வழிபட்டுவந்த சோழர்களால் அடிப்படையில் கட்டப்பட்டது. பிறகு வந்த மன்னர்கள் இக்கோவிலின் கட்டுமானத்தில் வெவ்வேறு வடிவமைப்பை சேர்த்துக் கொண்டனர். ஆயினும் அடிப்படை வடிவமைப்பு சோழர் கட்டிடக் கலையே ஆகும்.

## ஐராவதீஸ்வரர் கோயில்

கும்பகோணத்திலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள தாராசுரத்தில் ஐராவதீஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் பிரகதீஸ்வரர் கோவில்களில் இருப்பதை விட சிறியதாக இருந்தாலும், மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்டதாக திகழ்கிறது ஐராவதம் கோவில் சிற்பங்கள். ஒரு தேரை, குதிரைகள் இழுத்துச் செல்வது போல அமைந்திருக்கும் ஐராவதீஸ்வரர் கோயில், நிச்சயமாக நாம் அனைவரும் பார்க்க வேண்டிய அருமையான திருக்கோவில் ஆகும். துர்வாச முனிவரின் சாபத்தினால் தன்னுடைய நிறத்தை இழந்த இந்திரனின் யானை ஐராவதம், இங்கு வந்து சிவனை வழிபட்டு, சாப விமோச்சனம் பெற்றதாம். அதனால், இந்த கோவிலுக்கு ஐராவதீஸ்வரர் கோயில் என்ற பெயர் வந்ததாக கூறப்படுகிறது.

## காசி விஸ்வநாதர் கோயில்

கும்பகோணம் மகாமகம் குளத்துக்கு அருகிலேயே சிவாலயமான காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலில் சிவன் சன்னதியை தவிர நவகன்னியர்களான கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, ,காவேரி, கிருஷ்ணா, கோதாவரி, துங்கபத்ரா, சரயு ஆகிய புனித நதிகளுக்கும் சன்னதிகள் உள்ளன. இக்கோயில் குறித்து தேவாரத்தில் பாடல் இடம்பெற்றிருப்பதுடன், இராமாயண காலத்திலேயே இராமரும், லக்ஷ்மணனும் இங்கு சிவனை வழிபட்டதாக நம்பப்படுகிறது.

## கல்யாண பசுபதீஸ்வரர் கோவில்,

சோழர்கள் ஆட்சிசெய்த காலத்தில் கல்யாண பசுபதீஸ்வரர் கோவில் கட்டப்பட்டது. ஐந்து அடி உயரம் உடைய பசுபதீஸ்வரர் லிங்கத்திற்கு இக்கோவில் பெயர்பெற்றது. மேலும் இங்கே ஐந்து சிலைகளின் கூடுகை இருக்கிறது. ஒரு பசுவின் காம்பில் இருந்து வடியும் பாலில் குளிப்பதைப் போன்று லிங்கம் கர்ப்பக்கிரகத்தில் காட்சியளிக்கிறது.

## கைலாசநாதர் கோயில், காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் 8ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் இராஜசிம்மனால் கட்டத் தொடங்கப்பட்டதெனினும், அவனுடைய மகனான 3ஆம் மகேந்திரவர்மனே கட்டிடப் பணிகளை முடித்ததாக வரலாறு கூறுகிறது. அதன் பின்னர் 14ஆம் நூற்றாண்டில் விஜயநகர பேரரசின் காலத்தில் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

## தென்காசி காசிவிஸ்வ நாதர்

காசிவிஸ்வ நாதர் கோவில் குற்றாலத்திலிருந்து 8 கி. மீ தொலைவில் தென் காசியில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் கி.பி 1455ஆம் ஆண்டு பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டது. புராணங்களின் படி இந்த மன்னன் காசிக்கு செல்ல விரும்பியதாகவும், ஆனால் அந்நகரம் முஸ்லீம்களின் கட்டுப்பாட்டின் இருந்ததால் காசியில் உள்ள அதே அசல் கோவிலின் மாதிரியாக இந்தக் கோயிலை உருவாக்கியதாக சொல்லப்படுகிறது.

## திருவாப்பனூர் ஆப்புடையார் கோயில், மதுரை

மதுரை நகரின் ஒரு பகுதியான செல்லூர் என்ற இடத்தில் திருவாப்பனூர் ஆப்புடையார் கோயில் அமைந்துள்ளது. சோழாந்தகன் என்ற பாண்டிய மன்னன் வேட்டையாடச் சென்றபோது திருவாப்புடையாரை (சுயம்புலிங்கத்தைக்) கண்டு முதன்முதலில் தரிசனம் செய்துள்ளான். அப்பாண்டியனது மகன் சுகுணன், திருவாப்புடையாருக்குக் கோயில் எடுப்பித்தான் என்று சொல்லப்படுகிறது.

## மாசில்லாமணீஸ்வரர் கோயில், திருமுல்லைவாயில்

சென்னையின் அம்பத்தூர் பகுதியிலிருந்து 2 கி.மீ தொலைவில் உள்ள திருமுல்லைவாயிலில் மாசில்லா மணீஸ்வரர் கோயில் கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலில் உள்ள நந்தி சிலை வழக்கத்துக்கு மாறாக சிவபெருமானை நேராக நோக்காமல், கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது.

– தொகுப்பு: ஷ்யாம்

aanmeegamalar.com



# ‘ராமருக்கு உதவிய அணில் போல’ ‘ஊர் கூடி தேர் இழுப்பது போல’

## மன்னர்கள் வழியில் ஆலயத்திருப்பணி செய்வோம்.! வாருங்கள் பக்தர்களே...

மதுரை மகாபெரியவர் ஆலய திருப்பணியில் பங்கெடுக்க அரிய வாய்ப்பு..

பூசலார் நாயனார்.. தன்னிடம் வசதியில்லா நிலையில் மனதிலேயே சிவபெருமானுக்குக் கோயில் கட்டியவர். சிவனின் திருவிளையாடலாக அதே சமயத்தில், சோழ மன்னர் ஒருவரும் கோயில் கட்ட, பூசலார் கட்டிய மனக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான், மன்னர் மூலமாக அவரது பக்தியை உலகறியச் செய்தார்.

பூசலார் நாயனாரின் இருதயத்தில் எழுந்த கோயில் என்பதால், சென்னை அருகே திருநின்றவூரில் 'இருதயாலீஸ்வரர்' என்ற பெயரில் இன்றும் இருக்கிறது இக்கோயில்.

பாக்கியத்தை தவற விடலாமோ.?

சொந்தமாக வீடு கட்டுவதே 'குதிரைக் கொம்பு!' எனும் போது, இறைவனுக்கு கோயில் கட்டுவது அவ்வளவு எளிய விஷயமா.? ஒரு கோயிலுக்கான திருப்பணியில் நாம் பங்கெடுக்கும் வாய்ப்பு வருகையில், நாம் அதை விட்டு விடலாமா.? எவ்வளவு பெரிய பாக்கியம் அது..!

இதோ அந்த வாய்ப்பு உங்களைத் தேடி வந்திருக்கிறது. 'கருணைக்கடல் காஞ்சி மகா பெரியவா ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்' அருளால்..!

புண்ணிய திருத்தலமான 'திருமாலிருஞ்சோலை' எனப்படும் மதுரை கள்ளழகர் கோயில் மலை அடிவாரத்தில், காஞ்சி மகாபெரியவர் திருக்கோயிலை அமைக்க இருக்கிறது 'மதுரை அனுஷத்தின் அனுக்கிரஹம்'.

கள்ளழகர் திருக்கோயிலின் தீர்த்தக்குளம் அமைந்திருக்கும் பொய்கைக்கரைப் பட்டியில், இயற்கை எழில் சூழ பொலிவுற அமையவிருக்கிறது இக்கோயில். இதற்கான பூர்வாங்கப் பணிகள் வெகு விரைவாக தொடங்கப்பட இருக்கின்றன.

மதுரையில், 'ஸ்ரீகாஞ்சி மகாபெரியவா கிருஹம்' என்னும் கோயிலை நிர்வகித்து நடத்திவரும் 'அனுஷத்தின் அனுக்கிரஹம்' நிறுவனர் நெல்லை பாலு அவர்களின் சீரிய முயற்சியில் அமையவிருக்கிறது இந்தக் கோயில்.

அடுத்த ஓராண்டுக்குள் இந்தக் கோயில் கட்டுமானம் பூர்த்தி பெற்று ஸ்ரீஸ்ரீ காஞ்சி மகா பெரியவா சந்திர சேகரேந்திர ஸ்வாமிகளின் அருள் ஆசியோடு கும்பாபிஷேகம் செய்யப்பட இருக்கிறது.

அவரது அருளாசியைப் பெற்ற பக்தர்கள், "ராமருக்கு உதவிய அணில் போல", "ஊர் கூடி தேர் இழுப்பது போல" திருப்பணியில் பங்கு பெறும் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அன்போடு அழைக்கிறோம்.!

### எப்படி உதவலாம்.?

- ✦ திருப்பணிக்குப் பணமாக மட்டுமின்றி கட்டிட சாமான்கள், இதர பொருட்களாகவும் வாங்கிக் கொடுக்கலாம்.



- ✦ கோயில் அமையவிருக்கிற இடம், கட்டுமானம்சேர்த்து சதுர அடி ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 500 ஆகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. சதுரடி வீதமாக ரூ.3,500 அல்லது 2 சதுர அடி, 5 சதுர அடி, 10 சதுர அடிஎன விரும்பும் அளவுகளில் அதற்கான தொகையை தரலாம்.
- ✦ கோயில் அமைவதற்கான செலவுகள் பல லட்சங்களைத் தொடுவதால், ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடை தரும் கொடையாளர்களின் பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட இருக்கிறது.

### மக்கள் பணியில்..

Rtn.நெல்லை பாலு, நிறுவனர் அனுஷத்தின் அனுக்கிரகம், நி102, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை 625016 Ct: +91 9442630815

தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 80G வரி விலக்கும் உண்டு. நன்கொடைகளை அனுப்ப வேண்டிய கணக்கு விவரம் –

தொடர்பு எண்: GPay & Phonepay: +91 9442630815

**Ac Details:**

## Maduraiyun Atchaya Paathiram Trust,

**AC No: 110031396472**

**Canara - Madurai West Avani Moola Stteet Branch, IFSC: CNRB0001010**

**MICR: 625015006**

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.

## ராமருக்கு உதவிய அணில் போல... ஊர் கூடி தேர் இழுப்பது போல...
## மன்னர்கள் வழியில் ஆலயத் திருப்பணி செய்வோம்... வாருங்கள் பக்தர்களே...



# மதுரை அழகர்கோவில் அருகே ஸ்ரீ மகா பெரியவா ஆலயத் திருப்பணியில் பங்கெடுக்க

# ஓர் அரிய வாய்ப்பு!

**பூசலார் நாயனார்...** சிவபெருமானுக்கு ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என நினைத்து, தன்னிடம் அதற்கான வசதி இல்லாத போது மனதிலேயே ஆலயம் கட்டுவது போல நினைத்துக் கொண்டார், எப்படி? இன்று வானம் தோண்டுகிறோம். அஸ்திவாரம் போடுகிறோம். கட்டிடம் எழும்புகிறது. கோபுரம் கட்டுகிறோம் என ஒரு கோயிலை கட்ட எத்தனை நாட்களாகுமோ அத்தனை நாட்களும் மனதாலேயே கோயில் கட்டினார்.

**சிவனின் திருவிளையாடலாக...** அதே சமயத்தில் சோழ மன்னர் ஒருவரும் சிவனுக்கு கோவில் கட்ட, பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான் மன்னர் மூலமாக அவரது பக்தியை உலகறியச் செய்தார். பூசலார் நாயனாரின் இருதயத்தில் எழுந்த கோயில் என்பதால், சென்னை அருகே திருநின்றவூரில் **"இருதயாலீஸ்வரர்"** என்ற பெயரில் இன்றும் இருக்கிறது இக்கோயில்.

## பாக்கியத்தை தவறவிடலாமோ?

**சொந்தமாக நமக்கென ஒரு வீடு கட்டுவதே குதிரைக் கொம்பு!' எனும் போது இறைவனுக்கு கோயில் கட்டுவது அவ்வளவு எளிய விஷயமா?**

**ஒரு கோயிலுக்கான திருப்பணியில் நாம் பங்கெடுக்கும் வாய்ப்பு வருகையில் நாம் அதை தவற விட்டு விடலாமா? எவ்வளவு பெரிய பாக்கியம் அது!**



கருணைக்கடல் காஞ்சி மகா பெரியவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளால்

### இதோ அந்த வாய்ப்பு உங்களைத் தேடி வந்திருக்கிறது.

புண்ணிய திருத்தலமான 'திருமாலிருஞ்சோலை' எனப்படும் **மதுரை கள்ளழகர் கோயில் மலை அடிவாரத்தில், காஞ்சி ஸ்ரீ மகா பெரியவருக்கு திருக்கோயிலை அமைக்க இருக்கிறது 'மதுரை அனுஷத்தின் அனுகிரஹம்'.**

கள்ளழகர் திருக்கோயிலின் தீர்த்தக்குளம் அமைந்திருக்கும் பொய்கைக்கரைப்பட்டியில், இயற்கை எழில் சூழ பொலிவுற அமையவிருக்கிறது. இந்தக் கோயில். இதற்கான பூர்வாங்க பணிகள் வெகுவிரைவாக தொடங்கப்பட இருக்கின்றன.

**மதுரை, S.S.காலனி, எண்.13, பொன்மேனி நாராயணன் ரோட்டில் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா கிருஹம்'** என்னும் கோயிலை நிர்வகித்து நடத்தி வரும் 'அனுஷத்தின் அனுக்கிரஹம்' நிறுவனர் **நெல்லை பாலு** அவர்களின் சீரிய முயற்சியால் அமையவிருக்கிறது இந்தக்கோயில். அடுத்த ஓராண்டுக்குள் இந்தக் கோயில் கட்டுமானம் பூர்த்தி பெற்று ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருள் ஆசியோடு கும்பாபிஷேகம் செய்யப்பட இருக்கிறது.

அவரது அருளாசியைப் பெற்ற பக்தர்கள் **"ராமருக்கு உதவிய அணில் போல", ஊர் கூடி தேர் இழுப்பது போல"** இந்தப் புனிதத் திருப்பணியில் பங்கு பெறும் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அன்போடு அழைக்கிறோம்.

நன்கொடைகளுக்கு
80G வருமான வரிவிலக்கு உண்டு
**நன்கொடைகளை அனுப்ப**
G Pay PhonePe **94426 30815**
Cheque, M.O. மூலமாகவும் பணம் அனுப்பலாம்

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், அனுஷத்தின் அனுக்கிரஹம்
G-102, சாந்தி சதன் குடியிருப்பு,கோச்சடை,
மதுரை - 625016. செல் : 9442630815

Account Details :
**MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST**
**A/c No.110031396472**
**Canara Bank**
**Madurai West Avani Moola Street Branch**
**IFSC Code: CNRB0001010**
**MICR : 625015006**



**எப்படி உதவலாம்?** இத்திருப்பணிக்கு பணமாக மட்டுமின்றி கட்டிட தளவாட சாமான்கள், இதர பொருட்களாகவும் வாங்கிக் கொடுக்கலாம். கோயில் அமையவிருக்கிற இடம், கட்டுமானத்தைச் சேர்த்து சதுர அடி ஒன்றுக்கு ரூ.3,500 ஆகும்.

**அன்பர்கள் சதுரடி 3500/- வீதமாக 2,5,10 சதுர அடி என தாங்கள் விரும்பும் அளவுகளில் அதற்கான தொகையினைத் தந்தும் இத்திருப்பணிக்கு உதவலாம்.**

கோயில் அமைவதற்கான செலவுகள் பல லட்சங்களைத் தொடுவதால் ரூ.1லட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடையாகப் பங்களிப்பு செய்யும் கொடையாளர்களின் பெயர்கள் கோயில் கல்வெட்டிலும் பொறிக்கப்பட இருக்கிறது.

வாழ்க வளமுடன்! நேர்மையாக!!

# ஓம் ஸ்ரீ சற்குரு சச்சிதானந்தம் பழனிசாமி சுவாமிகள் கனக்கன்பட்டி, பழனி

## ஜீவ சமாதி குருபூஜை பதினோராம் ஆண்டுப் பெருவிழா

**கனக்கன்பட்டி செல்வோம் கவலைகளை தீர்ப்போம்**





குருவடி சரணம் திருவடி சரணம்

## நிகழ்ச்சி நிரல்

**8.3.2025 சனிக்கிழமை**

காலை 6 மணி முதல் 10 மணிவரை
மாணிக்கவாசகர் அருளிய
திருவாசகம் முற்றோதல்

மாலை 5 மணி ஆன்மீக சொற்பொழிவு
7 மணி பக்தி இன்னிசை

**9.3.2025 ஞாயிற்றுக்கிழமை**

காலை 3.00 மணி சித்தர் முறை
வேள்வி பூஜை காலை 9 மணிமுதல்
சிறப்பு ஆன்மீகச் சொற்பொழிவுகள்

நண்பகல் 11.00 மணி தீபாராதனை,
மகேஸ்வர பூஜை

பிற்பகல் 2.00 மணி பக்தி இன்னிசை

**தினமும் அன்னதானம் நடைபெறும் இப்புண்ணிய பூமியில் 08.03.2025 சனிக்கிழமை 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை குருபூஜை சிறப்பு அன்னதானம் நடைபெறும்**


## ஓம் ஸ்ரீ சற்குரு பழனி சுவாமிகள் அறக்கட்டளை

மோகன் தோட்டம், கனக்கன்பட்டி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் - 624 613

94867 76551 94682 12345

www.sarguru.org பதிவு எண்:02-BK IV-2014


நல்லதே நடக்கும்!!!

நன்கொடை செலுத்த ஸ்கேன் செய்யவும்

https://sarguru.org/donation

aanmeegamalar.com